

320.5

ஈழம் தமிழ் இனத்தின் பிரசவம் தொடக்கம் மயானம்மட்டும் மனப்புண்பாடுகள்

ஆக்கியோன் :
செ. சுந்தரலிங்கம்

320.5
455

ஈழம் தமிழ் ஒற்றுமை முன்னணி வெளியீடு — 5

சௌமிய தைப்பொங்கல் புதன்,
கலியுகம் — 5071,
புதன் — ஜனவரி 14, 1970

ஆங்கிலம் மூலம் : செ. சுந்தரலிங்கம்
தமிழ் ஆக்கம் : செ. சரவணமுத்து
"ஈழத்தொண்டன்-நாவலர்தாசன்"

3205

பதிப்புரிமை

விலை : ரூ. 1-00

EVELYN R... STI...UTE
152
LIBRARY

சன்னாகம், திருமகள் அழுத்தகத்தில், குரும்பசிட்டி, திரு. முத்தையா சபாரத்தினம் அவர்களால் அச்சிடப்பட்டு, கீரிமலை, 'மகரலிங்க வாச', திரு. செ. சுந்தரலிங்கம் அவர்களால், ஈழம் தமிழ் ஒற்றுமை முன்னணிக்காக வெளியிடப்பட்டது.

''ஈழத் தமிழரின் மனப் புண்பாடுகள் — பிரசவம் தொட்டு மயானம் மட்டும்: இத் துன்பங்களை நீக்கக் கடவுளே வரவேண்டும் எனக் கையெடுக்கின்றேன். இதற்குரிய பரிகாரம் என்னவாஞல், தொன்றுதொட்டிருந்துவந்த தமிழ் ஈழம் பகுதியை வகுத்து மறுபடி நிறுவி, ஈழத்தமிழ் இனத்தை, தனியரசாட்சி செய்ய, அணிவகுத்து, அடிகோலுவதேயாகும்.''

செ. சுந்தரலிங்கம் — 1970

I

''இலங்கையின் தேசாதிபதியாகக் கடமையாற்றிய காலத்தில் சிங்களர் தமிழர் ஆகிய இங்குள்ள இரண்டு இனங்களுக்கிடையிலும் இன்றுள்ளது போன்ற வெறுப்பு, கசப்பு, பிரிவினை ஆகிய உணர்ச்சிகள் உற்பத்தியாகியிருக்கும் என்று நான் ஒருபோதும் எதிர்பார்த்ததில்லை. இந்தச் சூழ்நிலைக்கு முழுக்காரண கர்த்தா சேர் ஜோண் கொத்தலாவலையும் அவரது பொறுப்பிலிருந்த அரசாங்கமுமே என்று நீங்கள் திடமாகச் சொல்லுவது முற்றிலும் சரியானதே யாகும். ஆனால் ஒன்றுமட்டும் நான் சொல்லவேண்டும். சேர் ஜோண் கொத்தலாவலை தமிழ்மக்களை 'சவுக்கடி' மூலம் தண்டித்ததாகக் கூறின், காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ, ஆர். டி. பண்டாரநாயக்கா தனது 'தேள்கடி' விஷமூலம் தமிழரைத் துன்புறுத்தினர் என்பதேயாகும். சிங்களர் தமிழரை நடத்தின முறை எதிர்காலத்தை எண்ணிப் பாராததும் மூடத்தன மானதுமாகும்.''

சோல்பெரி பிரபு — 1964

II

''இலங்கை அரசாங்கத்திற்கு நான் சிபாரிசு செய்த அரசியல் சட்டத்தில், அந்த வேளையில், சிறுபான்மை இனத்தவர்க்குத் தாராளமான பாதுகாப்பு இருந்தது போலவே எனக்குக் காணப்பட்டது. ஆனால் அரசியல் சட்டத்தின் 29ஆம் பிரிவு நான் அப்போது எண்ணிய அளவுக்குச் சக்திவாய்ந்ததாகவோ, பயனளிக்கக்கூடிய தாகவோ அமையவில்லை. இப்போது நான் எண்ணுகிற மாதிரி, அந்த வேளையில் '' மனித உரிமைகள் '' என்று ஒரு தனி அம்சத்தினை இதனுட் சேர்த்திருக்கவேண்டும். இந்திய அரசியல் சட்டத்திலும் வேறு சில நாடுகளின் அரசியல் சட்டத்திலும் இப்படியான '' பாதுகாப்பு அம்சங்கள் '' சேர்க்கப்பட்டுள்ளன. சமஷ்டி அரசோ அல்லது தமிழ் சுய அரசாட்சியோ சரியானதாக இருக்கும் என நான் நம்பவில்லை. சமஷ்டி அரசிய லானது இலங்கையில் நடைமுறையில் சரிவராத, அனுஷ்டிக்கமுடியாத, சிக்கலான விடயமாகும். தமிழ் தனி அரசு முறை நடைமுறையில் சரிவரினும் பொரு ளாதார ரீதியில் கஷ்டமான திட்டமாகும்.''

சோல்பெரி பிரபு — 1964

III

''மாட்சிமைக்குரிய பிரபுவே — ஈழம் தமிழ் இனகயாட்சி தனி அரசுக்குத் தங்களின் ஒரே மறுப்பு ''பொருளாதார ரீதியில் கஷ்டமான திட்டம்'' என்பதாகும். பொருளாதார அடிப்படையில் வரக் கூடிய கஷ்டங்கள் பற்றி, இந்த விடயத்தைப் பல கோணங்களிலிருந்தும் நான் அவதானமாகக் கூர்ந்து ஆராய்ந்தேன். 1799ஆம் ஆண்டின் ஹியூ கிளெக்ஹோன் என்பவரது குறிப்பின்படியும், 1803, ஜனவரி முதலாம் திகதியின் அரோசிமித் என்பார் நில அளவைப் படத்தின் படியும் தமிழ் ஈழம் மீண்டும் உருவாக்கப்படுமானால் ஈழம் பொருளாதாரத்தில், சிங்களத்திலும் பார்க்கப் பன்மடங்கு சுபிட்சமான நிலையிலிருப்பது நிச்சயமாகும். அதுமட்டுமன்றி தன்னம்பிக்கையுடைய தனி ஈழம் நிதிநிலைமையிலும், பொருள்பண்ட முதன்மையிலும் மேம்பாடு பெற்று விளங்கும் என்பதற்கையமில்லை. ஆனால் இன்றிருக்கும் சூழ்நிலைமையில் இதே கொள்கை தொடர்ந்திருப்பின், உண்மையாகவே எதிர்காலத்திலும் கூட, ஈழத்தின் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப் படும். இதற்குக் காரணம் சிங்கள அரசியல்வாதி களின் திட்டமிட்ட சீரழிக்கும் செயல்முறைகளே தான்.''

செ. சுந்தரலிங்கம் — 1964

எல்லா மக்களதுமாய, எல்லா மக்களாலுமாய, எல்லா மக்களுக்குமாக ஒரு அரசாங்கத்தை உற்பத்தி பண்ண நான் இன்று பொறுப்பேற்றிருக்கின்றேன்.

டி. எஸ். சேனநாயக்கா — 1947

பொருளடக்கம்

		பக்கம்
	முன்னுரை	viii
1.	ஈழம் தமிழ் இனக் குழந்தையின் பிறப்பும் ஈழம் தமிழ் இன மக்களின் சுகாதாரமும் ...	1
2.	ஈழம் தமிழ் இனக் குழந்தையின் பெயர், இனம், பிள்ளைப் பதிவு	3
3.	ஈழம் தமிழ் இனப் பிள்ளையின் ஆரம்பகல்விப் படிப்பும், உயர்தரக் கல்விப் போதனையும் ...	5
4.	ஈழம் தமிழ் இன மக்களின் மொழி அந்தஸ்துக் குறைப்பு	8
5.	ஈழம் தமிழ் இன இளைஞரின் உத்தியோகப் பிழைப்பு	11
6.	ஈழம் தமிழ் இன மக்களின் விவசாய கைத் தொழில் அபிவிருத்திச் சீவியம் ...	16
7.	தமிழ் ஈழத்தில் முஸ்லிம் மக்களினது கதி ...	26
8.	ஈழம் தமிழ் இன மக்களின் விவாகப் பதிவு	30
9.	ஈழம் தமிழ் இன மக்களுக்கு இலங்கைப் பாளிமெந்து ஜனநாயக அரசியலில் உள்ள பங்கு	32
10.	ஈழம் தமிழ் இன மக்களின் பேச்சு, எழுத்து, கூட்டம், எண்ணம், கலை-கலாச்சாரச் சுதந்திரம்	35
11.	ஈழம் தமிழ் இன மக்களுக்கு பயம் பீதியற்ற வாழ்வு	38
12.	ஈழம் தமிழ் இனத்தின் வழிபாட்டுச் சுதந்திரம்	42
13.	ஈழம் தமிழ் இன மக்களின் பரம்பரைத் தாய் நாடு பறிமுதல் செய்யப்படுகின்றதே! ...	49
14.	ஈழம் தமிழ் இன மக்களின் மரணப் பதிவு ...	52
15.	ஈழம் தமிழ் இன மக்களின் சமுதாய அழிவு ஒழிவு	53
	பின்னுரை	57

முன்னுரை

சுதந்திர சாசனத்தை 1776ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஐக்கிய மாகாணங்களின் பிரதிநிதிகள் தங்கள் தேசத்தில் அரங் கேற்றினர்கள். இதே சாசனத்தை தமிழ் ஈழத்தின் தலைவர்களுக்கு உணர்ச்சியை உறுத்தக்கூடிய ஓர் உதாரணமாகக் கருதிக் கொள்ளலாம்.

அந்த சாசனத்தின் முன்னுரை கூறுவதாவது :-

''மனிதவாழ்க்கையின் சந்தர்ப்பங்களில், எப்போதாவது ஓர் இனம் வேறு இனத்தோடு பிணைக்கப்பட்டிருந்த அரசியற் கட்டுப்பாடு நீதியற்ற முறையில் இருந்தால், அதை அகற்றச் சந்தர்ப்பம் ஏற்பட்டால், பாதிக்கப்பட்ட சமுதாயத்திற்கு கடவுள் நீதியும், மனு நீதியும் பிரித்து வகுக்கப்பட்ட சமமான ஸ்தானத்தைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கும்.

''நெடுங்காலமாகப் பாதிக்கப்பட்ட சமுதாயத்தை அமிழ்த்தவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் கையாளப் படுகிற அக்கிரமங்களையும், அவமானங்களையும் தாங்கமுடி யாத சந்தர்ப்பத்தில், அந்த அக்கிரமமான அரசாங்கத்தை அகற்ற உரிமையும் கடமையும் உண்டு. அத்துடன் தமது எதிர்காலக் காப்புறுதிக்காக ஒரு புதிய பாதுகாவல் ஒழுங்கையும் அமைத்துக்கொள்ளத் துணியவும் வேண்டும்.''

1952ஆம் ஆண்டுக்குப்பின் சுதந்திர ஈழத்தின் சட்டசபை யினரின் சரித்திரமும், அரசியலாரின் சரித்திரமும் யாதெனில், ஒரே நோக்கோடு ஈழம் வாழ் தமிழருக்குத் தொடர்ந்து அநியாய அக்கிரமம் இழைத்தலும், தமிழர்களைச் சிங்கள சமுதாயத்திற்கு அடிமைப்படுத்தலும், ஈழத் தமிழர்களை இனக் கொலை செய் தலும், ஈழத்தமிழ் இனத்தைச் சிங்கள இனத்தோடு ஒன்றுபடக் கலத்தலுமேயாம். இவற்றை முன்னெடியாக நிரூபிக்கவேண்டு மாதலால் ''கள்ளங்கபடமற்ற உலகத்திற்கே சமர்ப்பிப்போம்.''

தைப்பொங்கல்,
கலியுகம் 5071,
சௌமிய தை புதன்,
ஜனவரி 14, 1970.

செ. சுந்தரலிங்கம்
ஈழம் தமிழ் ஒற்றுமை முன்னணித் தலைவன்

ஈழம் தமிழ் இனத்தின் மனப் புண்பாடுகள்

மனப் புண்பாடு, — 1

ஈழம் தமிழ் இனக் குழந்தையின் பிறப்பும் ஈழம் தமிழ் இன மக்களின் சுகாதாரமும்

ஓர் ஈழம் தமிழ்த்தாய் பிள்ளைப் பெறுவுக்காக ஈழத் தமிழ்ப் பகுதியிலேயுள்ள ஓர் அரசாங்க ஆஸ்பத்திரிக்குச் சென்று வயிற்று நோவில் கூக்குரல் போட்டால் அவருக்கிரங்கிக் கெதியில் கவனிப் பார் ஒருவருமில்லை. காரணம் மருத்துவிச்சி சிங்களப் பெண். தமிழ் விளங்காது. தமிழ்த்தாய் கூக்குரல் போட்டு அழுது பிரசவ நோயில் அழுந்துவதுதான். பல முறைகளில் தமிழ் விளங்கும் மருத்துவிச்சிகளை அனுப்பும்படி செய்த விண்ணப்பங் களுக்குப் பதில்கூடக் கிடைத்ததாகத் தெரியவில்லை. ஈழம் தமிழ்ப் பிள்ளை பிறக்கிற கதியும் அதோகதியாய் விட்டது. (27–2–1969 ''டெயிலி மிரர்'' பத்திரிகையில் வெளிவந்த உண்மையான புதினம்).

கொழும்புக்கு அடுத்தபடியாக யாழ்ப்பாண மாவட்டத்திலே தான் மிகக் கூடிய புற்று நோயாளர் தொகையுண்டு. இதற் காக அரசாங்கத்தால் யாழ்ப்பாணத்திற்கென்று தருவிக்கப்பட்ட புற்றுநோய்ச் சிகிச்சைக்குத் தேவையான சாமான்கள் பின்னர் கண்டிக்கு மாற்றப்பட்டன.

இலங்கை அரசியல் சட்டதிட்டத்தினதும் நிதிக்கட்டுப்பாட்டுப் பிரமாணங்களினதும் முறைப்படிக்கமைந்த ''வீரமன்ட் நடை முறை ஒழுங்கு'' என்பதன் பிரகாரம் ஒரு குறிப்பிட்ட பகுதி யின் அபிவிருத்திக்குப் பாளிமெந்து அங்கீகாரம் வழங்கி ஒதுக்கீடு செய்த பணத்தை இன்னோர் பகுதிக்கு மாற்றி உத்தரவிட மந்திரிகளுக்கு அதிகாரமுண்டு. சிங்கள மந்திரிகள் பல தடவை களில் தமிழ் ஈழம் பகுதிகளுக்குப் பாளிமெந்து ஒதுக்கிவிட்ட நிதிகளைச் சிங்களப் பகுதிகளுக்கு மாற்றியமைப்பதன்மூலம் இந்த ஒழுங்குமுறை அதிகாரத்தின் நல்ல நோக்கத்தை மீறியிருக்கின் றார்கள்.

சுகாதாரம் சம்பந்தப்பட்ட வகையில் காங்கேசன்துறைச் சிமெந்துத் தொழிற்சாலை தாங்கொணாத் தொல்லை தருவதாக வும் வந்து விட்டது! இத் தொழிற்சாலை மூன்று தொடக்கம்

நாலு கட்டை சுற்றுடலுக்குட்பட வசிக்கும் மக்களுக்கும் இதற் குள்ளிருக்கும் தனிப்பட்ட வைத்தியசாலைகள், அரசாங்க ஆஸ் பத்திரிகளிலுள்ள நோயாளருக்கும் சுகாதாரத்திற் கிடையூறாக இருக்கின்றது. எப்படியென்றால், சிமெந்துத் தொழிற்சாலையின் தூசு போக்கும் சிம்னிகள் பெருமளவு தூசுகளை வெளிக் கக்கு கின்றன. இத் தூசுகள் வெண்காயம், மிளகாய், வெற்றிலை முதலாய உணவுப் பயிர்வகைகளின்மீது படிந்து அவற்றை நாச மாக்குவதோடு சகல உணவு, மற்றும் பயிர் வகைகளையும் அசுத்த மாக்குகின்றன.

இந்தத் தொல்லையைத் தகுந்த விஞ்ஞான உபகரண மூலம் நிற்பாட்ட முடியும். ஆனால், சிங்கள அரசாங்கம் இதுபற்றி எதுவித அக்கறையும் எடுப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால், இந்தத் தொல்லையினால் தாக்கப்படுவது தமிழ் ஈழப் பகுதி — பாதிக்கப்படுபவர் ஈழத் தமிழ் இன மக்களேயாவர். இதுவே உண்மைக்காரணம்.

மனப் புண்பாடு, — 2

ஈழம் தமிழ் இனக் குழந்தையின் பெயர், இனம், பிள்ளைப்பதிவு.

ஈழம் தமிழ்க் குழந்தை ஒன்றின் பெயர் தமிழ்ப் பெயராக விருந்தால் அல்லது சோனகப் பெயராகவிருந்தால் அப்பிள்ளையின் இனம் அல்லது சாதி என்ன என்றோர் பிரச்சனை ஏற்படுகின்றது. அதன் பெற்றோர் அதைச் சட்டப் பிரகாரம் தென்னிலங்கையில் பதிந்துகொள்வதற்குப் பிள்ளையின் தந்தை 1949ஆம் ஆண்டுக்கு முன் இலங்கையில் பிறந்தவர்கள் என்பதைப் பிறப்புப் பதிவு காரருக்கு நிரூபிக்கவேண்டும். பிள்ளையின் தகப்பன் 1949ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்திருந்தால் அப்பிள்ளையின் தந்தையின் தந்தை (பேரன்) இலங்கையிற் பிறந்தவராயிருத்தல் வேண்டும்: அல்லாவிடின், அந்தப் பிள்ளை இந்தியத்தமிழர் அல்லது இந்தியச் சோனகர் என்றே பதியப்படும். இதற்கெனக் குறிப்பிட்ட அத்தாட்சிப் பத்திரத்தில் கேட்கப்பட்ட விபரங்கள் சிங்களத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

உதாரணம் : நடராஜக் குருக்கள் என்பவர் சண்டிலிப்புரவில் (சண்டிலிப்பாயில்) பிறந்தவர். அவருடைய பிராமணப் பெண் தியாகராஜா சரோஜினி ; பருத்தித்துறையில் பிறந்தவர். பாணந் துறையில் ஓர் சைவக் கோவிலில் பூசகராக இருந்தார்கள். அவர்களுக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அந்தப் பிள்ளையையும், பெற்றோரையும் இந்தியத் தமிழ் ஆகப் பதிவுசெய்திருக்கிறார்கள்.

பிறப்புப் பதிவு இலக்கம் : 9984
பிறப்புப் பதிவு திகதி : 11 – 12 – 1962
பிறப்புப் பதிவுப் பிரிவு : களுத்துறைப்பட்டினம்.

இந்தப் பிராமண குடும்பத்தினர்க்கு இந்திய அரிசிக்கூப்பன்கள் வழங்கவேண்டி வந்துவிட்டது. ஒருகாலம் இவர்களை '' கள்ளத் தோணி '' எனக் கருதி இலங்கையிலிருந்து அகற்றவும்கூடும்!

(குறிப்புக்கள் இல்லாத வேறுபல உதாரணங்கள் இதே முறையில் எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன.)

சங்கைக்குரிய சிங்களப் பிக்குகளும், மஹாநாயக்க தேரோக் களும் (அதாவது – புத்தமதகுருமாரும், விகாராதிபதிகளான குருமாரும்) இப்பொழுது இன்னுமோர் விசித்திர அபிப்பிரா யத்தைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். அதாவது ஈழம் தமிழ்ப் பிள்ளைகள் பிறக்கும்போது அவர்களுக்குச் சிங்களப்

பெயர்களைச் சூட்டிப் பதிவுசெய்வது சாலச் சிறப்பாகும் என்பதுவே அவர்கள் புத்திமதி. (புத்தகுருமாருடைய பிரசங்கங்களும், கடிதங்களும், பிரசுரங்களும் பத்திரிகைகளில் இவ்வாறு பல வெளிவந்துள்ளன.)

சர்வதேச நாடுகள் அரசியல் அரசாங்க உரிமைகள் ஒப்பந்த சாசனத்தின் 24 (3)—வது கோட்பாட்டில் :

''ஒவ்வொரு பிள்ளைக்கும் தனக்குரிய தேசிய இன அந்தஸ்தைச் சம்பாதிக்கும் தனியுரிமையுண்டு'' என்று கூறப்பட்டுள்ளது. இந்த உரிமை பௌத்த குருமாரின் விபரீத எண்ணத்தால் பங்கப்பட்டு மீறப்படுகிறது.

> ''ஈழம் தமிழ் பிள்ளை ஒன்றின் பிறப்புப் பதிவை பெற்றோர் தமிழ்ப் பாஷையில் பதிவு செய்யவேண்டுமென்று விரும்பினாலும் கூட அப்பதிவு சிங்கள பாஷையிலேயே இருக்க வேண்டும்''.
>
> (பதிவுகாரியஸ்தரின் பிரமாண விதிகள்)

ஈழத் தமிழர்கள் தாம் பிறந்த நாட்டில் சிங்கள அரசாங்கத்தால் பரதேசிகள் ஆக்கப்பட்டும், அடக்கி ஒடுக்கி நசுக்கப்பட்டும் வருகிறார்கள் என்பதை இந்த உதாரணங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

மனப் புண்பாடு, — 3

ஈழம் தமிழ் இனப் பிள்ளையின் ஆரம்ப கல்விப் படிப்பும், உயர்தாக் கல்விப் போதனையும்.

ஈழம் தமிழ் இனப் பிள்ளையின் ஆரம்ப கல்வி பெற்றோரின் விருப்பப்படி இனிமேல் இருக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பொதுச் சபையினால் அங்கீகரிக்கப் பட்டு விஞ்ஞாபனம் செய்யப்பட்டுள்ளதான, அகில உலக மனித உரிமைகள் பிரகடனம் 26 (3)–வது கோட்பாட்டின்படி,

''பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு எவ்வித கல்வியைப் புகட்டவேண்டும் என்னும் உரிமை முதலில் அவர்களுக்கே உடையதாகும்''.

ஈழத் தமிழ்ப் பெற்றோருக்கு இந்த உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலம்வரை உதவிபெறும் பள்ளிக்கூடங்களும், உதவி நன்கொடை பெறும் பள்ளிக்கூடங்களும், தனிப்பட்ட முறையில் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களும் கத்தோலிக்கராலும், மற்றும் கிறிஸ்தவர்களாலும், இந்துக்கள், முஸ்லிம்கள், புத்தர்களாலும் நடாத்தப்பெற்று வந்தன. சமயத்தின் அடிப்படையில் சால்புச் சிறப்பு வாய்ந்ததாக அமைந்துள்ள பள்ளிக்கூடங்களில் புத்தசமயமல்லாத ஏனையமதச் சார்புடைய பள்ளிக்கூடங்களுக்கே அதிகம் நன்மைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களுண்டாயிருந்தன.

புத்தசமயமல்லாத மற்றும் சமய பள்ளிக்கூடங்கள் திறம்பட நடாத்தப்பட்டன. நிர்வாகச் சிறப்புடையனவாகவும் இருந்தன. மாணவர்களிடையே நல்ல ஒழுங்கு முறைகளும், விசேட முறையில் கல்வியும் போதிக்கப்பட்டன. இந்த உண்மைகளை எவருமறிவர். இதன் பலாபலன் பகிரங்க அரசாங்க உத்தியோக சேவைகளுக்குப் பௌத்த சமயப் பிள்ளைகளிலும் பார்க்க மற்றும் மதத்தைச் சேர்ந்த பிள்ளைகள்தான் திறமையின் அடிப்படையில் அதிகமானோர் தெரிந்தெடுக்கப்பட்டனர். அரசாங்கம் பள்ளிக்கூடங்களைப் பொறுப்பேற்றதான கொள்கை பௌத்தமத பள்ளிக்கூடங்களின் தரத்திற்கு ஏனையமத பள்ளிக்கூடங்களையும் தரத்தில் குறைக்கவேண்டும் என்னும் ''மட்டம் தட்டும்'' கொள்கையை உள்நோக்கமாகக் கொண்டதாகும். இதனால் புத்தமத, மற்ற ஏனைய மத பள்ளிக்கூடங்களையும் உயிரற்ற கல்விநிலையங்களாக்குவதே முக்கிய நோக்கமாகும். இன்னும், புத்தசமய

மல்லாத மற்றும் சமயத்தைத் தழுவிய பெற்ரோரின் பிள்ளைகளைத் தங்களின் சமய ஆசாரங்களுக்குரிய ஆசிரியர்கள்மூலம் கல்வி கற்பிக்கும் சந்தர்ப்பத்தை இல்லாமலாக்குவதுமாகும். உற்றுணர்ந்து பார்த்தால் புத்தமதமல்லாத ஏனையமதப் பிள்ளைகளுக்குரியதாய் மதச்சூழலை இல்லாமலாக்கவேண்டுமென்பதே நோக்கமாகும். சில கல்லூரிகளுக்கு (அதாவது, பள்ளிக்கூடங்களை அரசாங்கம் பொறுப்பேற்று நடத்தும் திட்டத்தின்கீழ் அமையாது தனித்து இயங்கும் பள்ளிக்கூடங்களுக்கு) ஓரளவு நிதியுதவி கொடுக்கப்படும் என்கின்றதாகிய வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. இன்னும் பண விடயத்தில் சிறு உதவியேனும் செய்து அக் கல்லூரிகளை மேலோங்கச்செய்யும் பேச்சும் காற்றில் பறந்துவிட்டது.

தமிழ் ஈழம் சிங்களப்பகுதியுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது வளங்குறைந்த பகுதியாகும். இதனால் பள்ளிக்கூடங்களை அரசாங்கம் பொறுப்பேற்கும் திட்டத்தினால் இந்தப்பகுதி பாரதூரமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

உயர்தரப் படிப்பும் சர்வகலாசாலைப் படிப்பும் ஈழம்தமிழ்ப் பிள்ளைகளுக்கு அவருடைய திறமையிலோ ஆற்றலிலோ இனி ஒருபோதும் இலவசமாகக் கிடைக்கப்போவதில்லை. சாதி, மதம், மொழி ஆகிய அம்சங்கள் துரோகத்தனமாக இவ்வமைப்புக்குள் புகுத்தப்பட்டு யாவும் பழுதடைந்துபோயின. இந்தத் துரோகச் செயல் 1948ஆம் ஆண்டின் அகில உலக மனித உரிமைகள் பிரகடனம் 26 (1)–வது கோட்பாட்டையும் 1966ஆம் ஆண்டின் சர்வதேச பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் உறுதிச் சாசனம் 13 (c) கோட்பாட்டையும் மீறிச் சீர்குலைத்து அவமதித்துள்ளது.

ஈழம்தமிழ்ப் பிள்ளைகள் அவர்களின் கல்விகற்கும் மொழியாக, தமிழையே, தமிழிலேயே படித்துக்கொள்ள வேண்டும். ஆங்கிலத்தை இரண்டாந்தர மொழியாகப் படிக்கும் சந்தர்ப்பம் ஒன்றுண்டு. ஆனால் ஆங்கிலத்தையும் தமிழைப்போலவே ஒரே அந்தஸ்தில் இரட்டை மொழிப் படிப்பாக, பிள்ளைகளும் பெற்ரோரும் விரும்பினாலுங்கூட, படித்தறிய வசதியில்லை. ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்கம் நியாயமான அளவு தமிழ் உபயோகச்சட்டத்தின்படி எந்தப் பகுதியிலும் தமிழுடன் சிங்களம் கற்றுக்கொள்ளப் போதியளவு வசதிகளைச் செய்து கொடுக்கும்.

அதன் பிரகாரம் அந்தப் பகுதிகளிலிருந்து உத்தியோகத்திற்கு அரசாங்கத்திற் சேரவேண்டுமானால் பரீட்சார்த்திகள் சிங்களப் பாஷையிலேயே சோதனை எடுக்கவேண்டிய சந்தர்ப்பம் வந்தாலும் வரும்.

இதன் பெறுபேறு என்னவாஞல் சிங்களம் மறைமுகமாகக் கட்டாய பாடமாக்கப்பட்டுத் திணிக்கப்படுகிறது. அரசாங்க சேவையில் சேர விரும்பும் ஈழத் தமிழ்ப் பிள்ளைகளுக்கெல்லாம் சிங்களம் இன்று கட்டாய பாடமாக உபயோகிக்க வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். தமிழ்ப்பிள்ளைகள் இதுவரை காலமும் ஆங்கிலத்தில் பெற்றிருந்த திறமையை இனிமேல் அடைய முடியாது. தற்போது 500 பேருக்குமதிகமான ஈழம் தமிழ் மக்கள் அதிஉயர்ந்த நிர்வாகத் தலைமைஸ்தானங்களிலும் விஞ்ஞான தொழில் நுட்பத் தலைமைப்பீடங்களிலும் உலகின் பல பாகங்களில் கடமையாற்றுவதாக அறிக்கை கூறுகிறது.

இது எப்படி ஏற்பட்டது என்றுல் அவர்கள் ஆங்கிலத்தில் பாண்டித்தியமும் திறமையும் உடையவர்களாக இருந்தபடியாற் றுன். ஈழத் தமிழ் மக்களுக்குத் தற்போது வாய்ப்பான இந்த நிலைமை இனிமேல் இருக்காது.

சில பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்குச் சிங்களம்தான் போதனுமொழியாக உபயோகிக்கப்பட வேண்டுமென்று, ஊரி லிருந்துவரும் சாதி சூழ்நிலையைக் காரணமாகக்கொண்டு, வித்தியாபகுதியார் சிங்களத்தைக் கற்பிக்கக் கட்டளைப்படுத்தி அண்மையில் சட்டத்திற்கு விரோதமாக முயற்சி எடுத்து விட்டார்கள். இந்த நடவடிக்கை பள்ளிப்பாலகர்க்குக் கல்விப் பகுதியார் வருவித்த படுபாதகமான செயலாகும்.

இலங்கையின் நாலு சர்வகலாசாலைகளில் இன்று முக்கியமாக இரண்டு சர்வகலாசாலைகள் (வித்தியாலங்கார, வித்தியோதய என்பன) சிங்களத்திற்காகும். மூன்றுவதாக கொழும்பில் உள்ள சர்வகலாசாலையிலும் தமிழ்ப்பிரிவை இல்லாமற் செய்ய வேண்டும் என ஆலோசனை கூறப்பட்டிருக்கின்றது.

இவை யாவும் துவேஷமான, துரோகமான, துன்பமான செயல்களன்றே!

மனப் புண்பாடு, — 4

ஈழம் தமிழ் இன மக்களின் மொழி: அந்தஸ்துக் குறைப்பு

''ஈழம் தமிழ் இன மக்களின் உடைமையும், உள்ளமும் உயிரும் அலைத்தும் ஒன்றுய் உருவமைக்கப்பெற்றிருக்கும் ஒரு புனித ஆலயமாக அமைந்திருப்பது அவர்தம் அன்னை மொழியாகிய அருந்தமிழ் மொழியே'' என்பது ஒரு தமிழ் வாக்கியம். இப் புனித தன்மை வாய்ந்து பரந்த தாய்மொழியாகிய கோவிலில் ஈழத் தமிழ்மொழி ஈராயிரம் ஆண்டுகளுக்கும் அப்பாலாக தெய்வீக அடிப்படையில் பொலிந்து இலக்கிய சால்பு மிளிரும் வண்ணம் வளர்ந்து வருகின்றது.

1796ஆம் ஆண்டில் பிரித்தானியர் இத்தீவின் ஆட்சிப் பொறுப்பை டச்சுக்காரரிடமிருந்து கையேற்றபோது இலங்கையில் போர்த்துக்கீசருக்கும் டச்சுக்காரருக்கும் உரிய பகுதிகளின் உத்தியோகபூர்வமான அரசாங்க மொழிகள் போர்த்துக்கீஸ மொழியும் தமிழ்மொழியும் ஆகும். யாழ்ப்பாண இராசதானி, கோட்டை இராசதானி ஆகிய இரண்டு இராசதானிகளாக அன்று அமைக்கப் பெற்றிருந்ததான இலங்கைத் தீவின் அப்போதைய கவர்னர் சேர் ரொபேட் பிறவுண்ட்றிக், 1813ஆம் ஆண்டின் ஜூலை மாசம் பத்தாந் திகதியைக்கொண்ட தனது அறிக்கையை, இங்கிலாந்திலுள்ள குடியேற்ற நாடுகளின் காரியதரிசிக்குச் சமர்ப்பிக்கும்போது கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்:

> ''தமிழ்மொழி .....போர்த்துக்கீஸ் சொற்கலப்புக் கொண்ட தாய், எல்லா மாகாணங்களிலும் உபயோகிக்கப்பெற்றதாய் இருப்பதோடு புத்தளம் தொடக்கம் மட்டக்களப்பு ஈறுக வடக்குத் திசையாக இவ்விரு மாவட்டங்களையும் உள்ளடக்கிய நிலப்பரப்பில் வாழும் மக்களின் சொந்த மொழியாகும். ஆகையால் சிங்கள மொழியுடன் தமிழ்மொழிக்கும் சம அந்தஸ்துக் கொடுத்து உற்சாகமூட்டுவதற்கு மாட்சிமை தங்கிய தாங்கள் ஆட்சேபம் தெரிவிக்கமாட்டீர்கள் என்பதில் எனக்கு முழுநம்பிக்கையுண்டு.''

1833ஆம் ஆண்டில் கோல்புறூக் கமிஷன் அறிக்கைக்குப் பின்னர் நிர்வாக ஒழுங்கு அமைப்பு முறைப்படி பிரித்தானிய அரசாங்கம் ஆங்கிலத்தை உத்தியோக மொழியாக்கியது. இதனால் அரசாங்க ஒப்பந்தப் பத்திரங்கள், காகிதங்கள், அறிக்கைகள் ஆகியவற்றில் தங்கள் தீர்ப்பையும் தீர்மானங்களையும் முடிவு செய்வதற்கு வசதியளிக்கும் வகையில் ஆங்கிலத்தையே அரசாங்க

மொழியாக அமைத்துக்கொண்டார்கள். ஆனலும் காணி உறுதிகள், பிறப்பு, விவாகம், இறப்புப் பிரதிகள் முதலாய அரசாங்கப் பத்திரங்களின் பதிவு சம்பந்தப்பட்ட வகையில் ஆங்கிலத்துடன் சேர்த்துத் தமிழும் சிங்களமும் சமஅந்தஸ்துடன் அரசாங்க மொழிகளாகவே இருந்தன. சிங்களமும் தமிழும் சகல சந்தர்ப்பங்களிலும் சரிநிகர் சமானமாக வழங்கப்பெற்றுப் பாவனையிலிருந்துவந்தன. ஆரம்ப கல்லூரிப் படிப்புக்கும் அடுத்த படியிலுள்ளதான நடுத்தரக் கல்லூரிப் படிப்புக்கும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் பாவனையிலிருந்தன. பிரித்தானியர் ஆட்சி நிர்வாகத்திலுள்ளபடி அரசாங்க உயர் உத்தியோகங்களுக்கும் பகிரங்க இராசாங்க சேவைகளில் நியமனம் பெறுவதற்கும் வசதியளிக்கும் முகமாக மேற் படிப்புகள் யாவும் ஆங்கிலத்தில்மட்டுமே ஊட்டப்பட்டன. ஆங்கிலேயரின் இந்த அரசாங்க ஒழுங்கு 1944ஆம் ஆண்டு வரையும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டது. இதேவருடத்தில் ''ஸ்ரேற் கவுன்ஸில்'' – அரசாங்க சபையில் – இலங்கையின் உத்தியோகபூர்வமான இராசாங்க மொழிகளாகச் சிங்களமும், தமிழும் அத்துடன் ஆங்கிலமும் வழங்கப்படவேண்டுமென்னும் தீர்மானம் மிகவும் அதிகப்படியான வாக்குகளால் நிறைவேற்றப் பட்டது. அந்நாட்களில் மந்திரியாகவும், பின்னர் இலங்கைப் பிரதமராகவும் பொறுப்பேற்றிருந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா உட்பட (''ஸ்ரேற் கவுன்ஸில்'') அரசாங்க சபையிலிருந்த முக்கியத்துவம் வாய்ந்த சிங்களத் தலைவர்கள் அனைவரும் இந்த மூன்று பாஷைகளும் சமசந்தர்ப்பமும் அந்தஸ்தும் உடையனவாக இருக்கவேண்டும் என்று கூறினர்கள்.

1956ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் அரசாங்க மொழி மசோதா எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவினல் ஆக்கப்பட்ட பாளிமெந்துச் சபையிலே அவரால் சமர்ப்பிக்கப் பட்டு விவாதம் நடைபெற்றபோது 'தற்போதைய நிலையில், தான் தனது மனக்கொள்கையை மாற்றிவிட்டதாக' பிரதமர் பண்டாரநாயக்கா அறைகூவலிட்டார். ''இரட்டை நாக்குச் சதி, இராஜாங்க நம்பிக்கைத் துரோகம்'' என்று அந்த நேரத் திலே பாளிமெந்துச் சபையிலே குறுக்குரைகூறிக் கூக்குரலிட் டார், அன்றைய வவுனியாப் பிரதிநிதி திரு. செ. சுந்தரலிங்கம்.

ஆனலும் நடந்தது என்ன? சிங்கள ஆட்சி அதிகார பலத் தைக்கொண்டு, சிங்களக் கொடுங்கோல் தத்துவத்தைக்கொண்டு, இராணுவப் பலத்துடன் பாளிமெந்தின் பெரும்பான்மைப் பலத்தையும் பிரயோகித்துத் தனிச்சிங்கள அரசாங்க மொழி மசோதாவை நிறைவேற்றிவிட்டார்கள் சிங்கள அகங்காரிகள்.

அதன்பின்னர் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதான தமிழ் மொழிப் பாவனைச் சட்டமும் அதன்கீழ்ப் பிரகடனம் செய்யப் பட்ட பிரமாணங்களும் வெறும் கண்துடைப்பேயன்றி நடை முறையில் செல்லுபடியான அரசகரும மொழியாகமாட்டா. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு துறையிலும் தமிழ்மொழி தாழ்த்தப்பட்டுவருவது வெளிப்படையாகும். மத்திய அரசாங்க நிர்வாகந்தொட்டு சகல கீழ் அரசாங்க நிர்வாகங்கள், அரசகரு மங்களின் பரிமாறல்கள் அனைத்தும் சிங்களமொழிமயமாகவே அத்திபாரமாக நடைபெறுகின்றன. இந்த அமைப்பில் தமிழ் மொழிக்கு எதுவித அந்தஸ்தும் இல்லையே.

தமிழ்மொழியை அக்கிராசனத்திலிருந்து அகற்றிவிட்டதான சிங்கள அதிகார அகங்கார ஆட்சியமைப்பு இன்று நிலைபெற்று விட்டது. ஈழத் தமிழர்கள் உயிரான தம் இதய ஒளியிழந்து விட்டனர்; தஞ்சமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்கள். அப்படியாகவே சதாகாலமும் வாழ விருப்பப்படுகின்றார்களா?

மனப் புண்பாடு, — 5

ஈழம் தமிழ் இன இளைஞரின் உத்தியோகப் பிழைப்பு

கல்விச்சாலைகளில் (ஸ்கொலஷிப்) சன்மானங்கள் (இலங்கையில் அல்லது வெளிநாடுகளுக்குப் போய் மேலைக்கிக் கல்வி பயிலும் விசேட சந்தர்ப்பங்கள்) அல்லது திறமைப் பரிசுகள் அல்லது அரசாங்க சேவைப் போட்டிச் சோதனைகள் ஆகிய பிரதான பரீட்சைகளில் தேர்ச்சி பெறுதல் அவற்றில் ஈடுபடுபவர் ஈழத் தமிழரா அல்லது பௌத்த சிங்களவரா என்னும் அம்சத்திலே தான் தங்கியுள்ளது.

அண்மையில் ரூயல் கல்லூரியில் விஞ்ஞான கணித பாடத்தில் (Mathematics) ''ரேனர் பரிசு'' என்னும் திறமைச் சன்மானம் முதலில் ஒரு ஈழத்தமிழ்ப் பிள்ளைக்கே வழங்கப்பட்டது. பின்னர் சில அரசியல் தலையீடுகளினால் இப்பரிசு ரத்துச் செய்யப்பட்டு விசேட சோதனையொன்று நடாத்தப்பட்டது: இதன் பயனாக, பின்னர் சிங்களப்பிள்ளை ஒன்றுக்கே இந்தப் பரிசு வழங்கப்பட்டது. (—இலங்கை டெயிலி மிரர் பத்திரிகைச் செய்தி)

சிங்கள இளைஞருக்கு வேலைவாய்ப்பளிக்கும் பாரபட்சமான மனப்பான்மையினால் ஈழத் தமிழர்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து வருகின்றது. ஆங்கிலத்திலே திறமையுள்ளவராகும் சந்தர்ப்பம் இருந்தமாதிரியிருந்தால் பிற தேசங்களில் பெரும் உத்தியோகங்கள் பெற்றுக்கொள்ளலாம். அதுவும் இப்போது தடையாகிவிட்டது.

ஒழுங்குக்கு விரோதமானதும் வெட்கித் தலை குனியவேண்டுவதுமான முறையில் அரசாங்க உத்தியோக சேவைக்குத் தமிழர்களைத் தெரிந்தெடுக்கும் விஷயத்தில் ஓரவஞ்சகமாக சிங்கள அரசாங்கம் துரோகத்தனமாக நடக்கிறது. 1950ஆம் ஆண்டு தொடக்கம் 1960ஆம் ஆண்டு வரைக்கும் (இரண்டு ஆண்டுகளுமுட்பட) அரசாங்க கிளைறிக்கல் உத்தியோக சேவைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டோர் புள்ளி விபரங்களை இங்கு தருகிறேன்.

பதினைரு ஆண்டுகள் பாதகமான முறையில் ஆண்டு தோறும் தொடர்ந்து சேர்க்கப்பட்டோரின் சதவீதம் வருமாறு :

41%; 52%; 41%; 29%; சோதனை இல்லை;
32%; 31%; 30%; 19%; 17%; 12%.

பொதுப்படையாக நோக்குமிடத்து கடந்த இருபது ஆண்டு களாக அரசாங்கத்தால் இப் பாதகமான கொள்கை கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றது.

1961ஆம் ஆண்டு தொடக்கம் 1968ஆம் ஆண்டு வரைக்கும் உள்ள புள்ளிவிபரக் கணக்குகளைப் பெற்றுக்கொள்ள முடிய வில்லை. இதிலிருந்து ஈழத்தமிழர்கள் அறிவு ஆராய்ச்சி ஆற்றல் முயற்சி ஆகியவற்றில் 1956ஆம் ஆண்டுக்குப் பின்னர் இன்று வரையில் பின்னேக்கி வருகின்றார்களா என்பது கேள்வி?

ஆட்சி நிர்வாக சேவைப் பரீட்சையில் (Administrative Service) 1965 இல் (வேறு ஆண்டுகளுக்குரிய விபரங்கள் எதுவுமில்லை) மொத்தம் 76 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் 68 பேர் சிங்களவர், 5 பேர் ஈழத் தமிழர், 2 பேர் முஸ்லீம்கள், ஒருவர் பறங்கியர். இதில் இன்னுமோர் முக்கிய அம்சம் இங்கு கவனிக்கப்படவேண்டும். இந்தப் பரீட் சைக்கு நடந்த எழுத்துச் சோதனையில் முதலாவதாக வந்தவர் ஒரு ஈழத் தமிழர். இவருக்குத் தேகத்தில் பிணியோ அங்கப் பிழையோ அல்லது வேறுவித நோய்களோ குறைகுற்றங்களோ ஒன்றேனும் கிடையாது. ஆனால் தெரிவு செய்யப்பட்ட 76 பேரிலும் அவருக்கு ஒரு இடம் கிடைக்கவில்லை என்பது புதின மல்லவா? தெரிவுபெற்ற 5 ஈழத்தமிழரில் முதலாக நின்றவர் முழுச்சோதனையிலும் 23ஆவது ஆளாக நின்றார். இவர் எழுத் துப் பரீட்சையில் எட்டாவது தானத்தைப் பெற்றார். கடைசி யாக நடந்த சோதனையில் ஆக மொத்தம் 30 பேர் தெரிவு செய் யப்பட்டனர். அதில் 4 பேர் மட்டும் ஈழத்தமிழர்.

எனது அனுபவத்தைப் பொறுத்தவரையில் நானும் ஒரு சர்வகலாசாலைப் பேராசிரியராக இருந்து நேர்முகப் பரீட்சைச் சபையிலும் பரிசோதகராகக் கடமையாற்றியுள்ளேன். உலக மெங்கும ஏற்றுக்கொண்ட ஒரு அடிப்படைக் கொள்கை என்ன வானால், எழுத்துச் சோதனையில் ஒரு பரீட்சார்த்தி காட்டியுள்ள திறமையைக் கீழ்த் தரப்படுத்த நேர்முகப்பரீட்சையைப் பயன் படுத்துவது வழக்கமில்லை. தற்போதிருக்கும் சுதந்திர இலங்கை இந்த உலகப் பொது வழக்கத்திற்கு ஒரு மாண்புமிக்க புறநடை யாகும்!

சாதாரண பொலிஸ் உத்தியோகத்தரைத் தெரிவு செய்த விடயத்தில் ஒரு வருடத்தில், மொத்தம் 40 பேர் தெரிந்தெடுக் கப்பட்டனர் என்றும் அவர்களில் 10 பேர்களிலும் குறைந்தோர் ஈழத்தமிழர் என்றும், அதற்கு அடுத்த ஆண்டில் மொத்தம் 300 பேரில் மூவர் மாத்திரமே ஈழத்தமிழர் என்றும் அறிகின்றேன்.

இன்னோராண்டில் நடந்த பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் சோதனையில் கிட்டத்தட்ட 100 பேர் தெரிந்தெடுக்கப்பட்டனர் என்றும் அவர்களில் 4 பேர் மட்டுமே ஈழத் தமிழர் என்றும் அறியக்கிடக்கின்றது.

இலங்கைப் பாதுகாப்புச் சேவைகள் இலாக்காவில் நியமனத்திற்கென விண்ணப்பித்தோரில் 300 பேர் மட்டில் ஆரம்ப பரீட்சைகளின் பின்னர் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இவர்களில் ஒருவர் மட்டுமே ஈழத்தமிழர். ''பௌத்த சிங்களவர் அல்லாத எவரும் பட்டாள அணிவகுப்பு ஸ்தானத்திற்குத் தெரிவு செய்யப்படக்கூடாது'' என்னும் ''எழுதாக் கொள்கை'' ஒன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது.

1968ஆம் ஆண்டில் இரண்டு தமிழ் ஈழம் இந்துக்களும் ஒரு தமிழ் ஈழம் முஸ்லீமும் இலங்கைப் பட்டாளத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் பட்டாளப் பயிற்சி நிலையத்தில் விடப்பெற்ற ஒரு கிழமைக்குள் பட்டாளப் பயிற்சிப் பொறுப்பதிகாரி அவர்களின் யூனிபோம் உடுப்புகளைக் கழற்றிவைத்து விட்டு 'வந்தவழியே போங்கள்' என உத்தரவிட்டார். காரணம் அவர்கள் சிங்களவர் அல்ல என்பதுதான்.

வெட்கம் கெட்ட முறையில் பாரபட்சமான வகையில் பொலிஸ் உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்தல் நடைபெறுகின்றது. உதாரணம்: 1968 ஆம் ஆண்டிலே தெரிவு செய்யப்பட்ட 24 உதவி இன்ஸ்பெக்டர்களில் ஆக ஒரே ஒரு தமிழர். ஒரு முஸ்லிமேனும் இல்லை.

அரசாங்க சேவைகளுக்குத் தெரிவு செய்யும் விடயத்தில் மொழியடிப்படையிலோ அல்லது சாதியடிப்படையிலோ இன்னும் அநேக உதாரணங்களைச் சொல்லமுடியும்.

அரசாங்க சேவைகளிலும் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களிலும் ஈழத் தமிழ்மக்கள் மனச்சாட்சிக்கு விரோதமான முறையில் நடத்தப்பட்டு வருகிறார்கள்.

அரசாங்க சேவைகளில்—பகிரங்க பொதுசன சேவைகளில்—1956ஆம் ஆண்டு தொடக்கம் ஈழத் தமிழ் உத்தியோகத்தர்களுக்கு முதன்மையிலும், திறமையிலும் பதவி உயர்ச்சி நியமனங்களை வழங்குதல் பகிரங்கமாக அலட்சியப்படுத்தப்பட்டுப் பாதகமாக மறுக்கப்பட்டுள்ளது.

1966ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பொதுச் சபையினால் அங்கீகாரம் செய்யப்பட்ட சர்வதேச பொருளாதார சமூக கலாசார சாசனம்: 7 (A) — (C) கோட்பாட்டின்படி;

> ''ஒவ்வொருவருக்கும் முதன்மை, திறமை ஆகிய இவ்விரு அடிப்படைகளிலும் வேறு காரணங்களுக்கல்லாமல் தனது உத்தியோகத் தொழிலில் மேலோங்கி வருமாறு அந்தந்த அந்தஸ்தில் சமசந்தர்ப்பம் கொடுக்கப்படவேண்டும்.''

என வரையறை செய்யப்பட்டுள்ளது. அரசாங்க உத்தியோகம் சம்பந்தமான இந்த அகில உலக கோட்பாடு குரோத விரோத முறையில் மீறப்பட்டுவிட்டதே!

உதாரணமாக, முதன்மையான உத்தியோகத்திலிருந்த பொலிஸ் மேலதிகாரி ஒருவர், 1958 ஆம் ஆண்டில் அன்றி 1959ஆம் ஆண்டின் முற்பகுதியில் பொலிஸ் மா அதிகாரியாக மேற்பகுதிக்கு வரும் நியமன அனுகூலம் பெற்றிருந்தார். அவர் ஒரு ரோமன் கத்தோலிக்கர் அல்லது புரட்டஸ்தாந்து கிறீஸ்தவர். அவரிடம் காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்கா இந்தக் கருத்துப்பட முகத்துக்குமுன்னால் கூறியதாவது: ''நீர் ஒரு பௌத்தராக இருந்திருப்பின் உமது பதவியேற்ற விடயம்பற்றி எனக்கொரு தலைவலியும் ஏற்பட்டிருக்காது''. இந்த முறையில்தான் சகல பௌத்தர் அல்லாத அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் நடைபெறுகின்றது; முக்கியமாக ஈழம் தமிழர்களுக்கு அவர்கள் இந்துக்களோ, முஸ்லிம்களோ, கத்தோலிக்கர்களோ மற்றும் கிறீஸ்தவர்களோ சகலருக்கும் நடைபெறுகின்றது.

இன்னோர் உதாரணம்: ஓர் ஈழம் தமிழருக்கு அரசாங்க உத்தியோக சேவையில் உயர்வு கொடுக்கப்படாமைக்குக் காரணம் அவர் வகித்த உத்தியோகத்திலிருந்து அடுத்த மேற்படிக்கு உயர்த்தப்படுவாரானால் அவருடைய பதவியேற்றத்தின் பின் பமையும் தொழில் அந்தரங்க விளக்கக் குறிப்புப்பத்திரங்களுடன் சம்பந்தப்பட்டதாயிருக்கும் என்பதற்காகவேயாகும். இவ்வாறு செய்தல் அரசாங்க அரசியல் உரிமைகள் சர்வதேச ஒப்பந்த சாசனம்:, 25 (C) கோட்பாட்டை மீறுவதாகும். அதாவது:

> ''சாதி, மொழி, மதம் போன்ற எதுவித வித்தியாசங்களையும் பாராட்டாது ஒவ்வொரு பிரசையானவர்க்கும் தனது நாட்டின் பகிரங்க பொதுசன அரசாங்க சேவைகளில் ஈடுபடப் பாகுபாடுகள் இன்றிப் பொது நிபந்தனைகளின் அடிப்படையில் சமசந்தர்ப்பம் வழங்கப்படல் அவசியம்.''

அகில உலக மனித உரிமைகள் பிரகடனம்: கோட்பாடு 21 (2) கூறுவதாவது:

"நாட்டின் பகிரங்க, பொதுசன, அரசாங்க சேவைகளில் ஈடுபடவும், பங்குபெறவும், தானம் வகிக்கவும் ஒவ்வொரு வருக்கும் சமசந்தர்ப்பமும் பூரண உரிமையு மூண்டு."

ஐக்கியநாடுகள் சபையின் முக்கிய சுதந்திர வரையறை ஒழுங்குகள், அரசாங்க அரசியல் உரிமைச் சாசனத்தின் பல வேறு சிறப்பு அம்சங்கள், அகில உலக மனித உரிமைகள் பிரகடனத்தின் விசேட கோட்பாடுகள், சர்வதேச நாடுகளின் பொருளாதார சமூக, சமய சுதந்திர சாசனத்தின் கட்டுப்பாடு களின் உறுப்புக்கள் போன்றவற்றின் பிரதானமானவைகள் கூட அநேகமாக அவமதிக்கப்பட்டுவிட்டன; பகிரங்கமாக மீறப்பட் டுள்ளன; பாதகமாகச் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. ஜன நாயகம், சுதந்திரம், மனித உரிமை, மக்கள் உடைமை, உத்தி யோக நியமனம், பதவி உயர்வு எல்லாம் வீண் தலையீடுகளினால் பாதகமான விதத்திற் பங்கப்படுத்தப்பட்டுள்ளன. கடவுளே வந்து ஈழம் தமிழ் இன மக்களைக் காத்து வழிகாட்ட வேண்டும்.

மனப் புண்பாடு, — 6

ஈழம் தமிழ் இன மக்களின் விவசாய கைத்தொழில் அபிவிருத்திச் சீவியம்

(அ) ஈழம் தமிழரின் விவசாய சீவியம்

அண்மையில் 1969ஆம் ஆண்டில் பாளிமெந்தில் கொண்டு வரப்பெற்று நிறைவேற்றப்பட்ட காணி அபிவிருத்திச் சட்டத் திருத்த மசோதாவை நடைமுறைக்குக் கொண்டுவர முன்னர் சட்டப்படி காணிக் கச்சேரிகள் நடத்தப்பட்டுக் காணி கொடுப்பதற்குத் தகுதிவாய்ந்தோரைத் தெரிந்தெடுக்கும்போது ''காணிக் கச்சேரிக்குரிய இடத்திற்கு அருகாமையில் வசிக்கும் மக்களே'' முதலில் தெரிந்தெடுக்க வேண்டு மென்பது முறை யாகும். மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு முன்னர் திருக் கோணமலையில் மத்தியவகுப்பு இலங்கையருக்குக் காணிக்கச்சேரி நடாத்தப்பட்டது. இந்தக் காணிக் கச்சேரியில் மொத்தம் 500 ஏக்கர் காணிகள் விநியோகிக்கப்பட்டன. மேட்டுக்காணி, வயற்காணி ஆகிய இருவகைக் காணிகளும் மிகவும் திறமான மண்வாசியமைந்த நிலங்கள்; தெரிந்தெடுக்கப்பட்ட 20 ஈழம் தமிழ் மக்களுக்கு ஒருவருக்கு 25 ஏக்கர்வீதம் வழங்கப்பட்டன. குத்தகைப் பணங்களே முற்பணமாகப் பிரமாணப்படி உடனே கட்டினர்கள். அதற்குப் பற்றுச்சீட்டுகள் அரசாங்கத்தாரால் வழங்கப்பெற்றன. அவரவர்க்குரிய காணிகள் யாவும் எல்லைக் கட்டை பொறிக்கப்பட்டதும் கொப்புநேரி முறைப்படி காண்பிக் கப்படும் என அறிவிக்கப்பட்டது. சில வாரங்கள் சென்றன. அந்தக் காணிக் கச்சேரிக்குத் தெரிந்தெடுக்கப்பட்டோருக்கு, றிசீட்டுகளைக் கச்சேரி அலுவலகத்திற்குக் கொண்டுவருமாறு, காகிதங்கள் அனுப்பப்பட்டன. அநேகமானவர்கள் பெருமகிழ்ச்சி யுடன்காணிகளை ஆட்சி ஏடுக்கப்போகிறோமென்று றிசீட்டுகளுடன் சென்றார்கள். ஆனால் அவர்கள் அடைந்தது பெரும் ஏமாற்றமும் மனக்கொதிப்புந்தான். றிசீட்டுகளைத் திருப்பிக் கொடுக்கும்படி பணிக்கப்பட்டார்கள். கச்சேரியில் கட்டிய பணங்கள் யாவும் திருப்பிக் கொடுக்கப்பட்டன. இந்த நடவடிக்கை காணி மந்திரி காரியாலயக் கட்டளைப்படி எடுக்கப்பட்டதாக அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இதற்குக் காரணம், அப்படி வழங்கப்பட்ட காணிகள் யாவும் உண்மையான கமக்காரர்களுக்கே கொடுக்கப்பட வேண்டு மென்பதற்காகும். இவ்வாறு கச்சேரிக் கவண்மேந்து ஏஜண்டரின் உத்தியோகத்தர்கள் ''போலிப்பேச்சும் கண்சாடையும்'' காட்டிக் காரியத்தை மழுப்பிவிட்டார்கள்.

ஆனால் கமக்காரருக்கென ஒரு காணிக் கச்சேரியும் நடாத்தப் படவில்லை. கடைசியில் நடந்தது என்ன? பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒரு சில சிங்களக் கோஷ்டியினர், பாளிமெந்து எம். பி. யான ஆர். ஜி. சேனநாயக்காவின் செல்வாக்கான ஆதரவுடன், முழுக் காணியையும் கைப்பற்றிக் கொண்டார்கள். இவர் சிங்கள ஜாதிக முன்னணி, சிங்கள ஜாதிக கட்சி அல்லது சிங்கள மக்கள் கட்சி எனப்படும் இயக்கத்தின் தலைவராவர்.

இது ஒருபுறமிருக்க, தெற்கு, மேற்கு மாகாணங்களைச் சேர்ந்த பெரும்பான்மையினக் கமத்தொழிலாளருக்கு கிழக்கு மாகாணத்தில் ''மங்களவாவி'' என்னும் குளத்தோரமுள்ள காணிகள் கொடுக்கப்படவேண்டுமென்று ஒதுக்கப்பட்டுள்ளன.

இன்னுமோர் உதாரணம்: பதவியில் குளக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் (சிங்களர் இப்பெயரை மாற்றி ''பதவியா'' என்றழைக்கின்றனர்.) 1950ஆம் ஆண்டில் குடியேற்றப்படுவதற் கெனத் தெரிந்தெடுக்கப்பட்ட 400 ஈழத் தமிழரில் ஒருவரையும் பின்னர் குடியேற்றவில்லை. இதற்குக் காரணம் மிகவும் பார தூரமான விடயமாகும்: ஈழத் தமிழருக்குக் காணிவழங்கி, அவர்கள் வந்து குடியேறும் பட்சத்தில் ஏற்கெனவே அங்கு குடி யேற்றப்பட்ட சிங்களக் குடியேற்றக்காரரால் அவர்கள் கொல்லப்படுவார்களெனப் பயமுறுத்தப்பட்டபோது, சிங்கள மக்களுக்கு வாய்க்குமெனக் கருதி, அரசாங்கம் பணிந்து கை விட்டமையும், அந்தச் சிங்களக் குடியேற்றக்காரரின் மிரட்டல் களுக்கெதிராக எதுவித நடவடிக்கையும் உடன் எடுக்காதிருந் தமையுமேயாகும். பாருங்கள் அரசாங்கம், தான்விரும்பியவாறு, சட்டத்தின்படி தெரிந்தெடுத்தோருக்குக் காணிகளைக் கொடுக்க முடியவில்லை. தற்போது அந்தக் குடியேற்றத்திலிருக்கும் சிங்கள மக்களின் வாக்குச் சீட்டுகளைத் திருகோணமலைத் தொகுதியிற் சேர்த்துத் திருமலை ஆசனத்தைச் சிங்களருக்குப் பெலப்படுத்தி, தமிழருக்குப் பெலவீனப்படுத்தி ஒரு சிங்களரைத் திருமலைப் பிரதிநிதியாக அனுப்ப எத்தனிக்கிறார்கள்.

1960ஆம் ஆண்டுக்குப் பின்னர் வவுனியா தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதியின் பிரேரணையின்படி தமிழர் இடங்கள் சிங்கள மக்க ளுக்கு வழங்கப்படலாமென்று சட்டத்திற்கு விரோதமாய்த் தீர்மானமாய் விட்டது. கெதியில் வவுனியாவும், முறையான நட வடிக்கை எடுக்கப்படாவிட்டால், கிழக்கு மாகாண நிலைமை யைப் போல, (குறிப்பாகத் திருகோணமலையைப் போல) ஆகி விடும். மதவாச்சிக்குத் தெற்கே பலவேறு குடியேற்றத் திட்டங் கள் அமைத்து இலட்சக்கணக்கான சிங்களரைக் குடியேற்றியுள் ளனர். ஆனால் அவர்களில் ஒருவராவது ஈழத் தமிழ் இனத்தவ ரல்ல. எல்லாம் சிங்களமயமாய்விட்டது.

உணவு உற்பத்திக்காக முடிக்குரிய காணிநிலம் அத்துமீறிக் கைப்பற்றப்பட்டுத் துப்புரவாக்கப்பெற்று பயிரிடும் ஆயத்தங்கள் செய்யப்படும்போது, சம்பந்தப் பட்டவர்கள் சிங்கள மக்களாலும் அப்பேர்ப்பட்ட நிலங்கள் அவர்களுக்கே ஒழுங்கு வரையறை செய்து வழங்கப்படும். ஆனால் இது விடயத்தில் சம்பந்தப் பட்டோர் ஈழத்தமிழர்களாலும் சிறு குறை குற்றங்களுக்கும் அவர்கள் மீது கச்சேரி விசாரணைகளும் கோர்ட்டு வழக்குகளும் தொடரப்படும். இந்த வெளியீடு அச்சேற்றப்பட்டுப் பிரசுர மாகும் வேளையில் யாழ்ப்பாணக் கச்சேரியின் நம்பகமான செய்தி களின்படி 300 வழக்குகள் ஈழத் தமிழரின்மீது முடிவுசெய்யப் பட்டும் இன்னும் 1500 வழக்குகள் மேற்கொண்டு தொடரப் படும் என்பதும் வெளியரங்கமாக்கப்பட்டுள்ளன.

சமீபத்தில் 1969ஆம் ஆண்டில் நடந்த ஒரு சம்பவம். அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் மகாநாட்டில், அவர்களின் நிகழ்ச்சி நிரலில், கிழக்கு வடக்கு மாகாணங்களில் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்கள் விகாரைகளுக்கும் பிக்குகளுக்கும் பௌத்த மக்களுக்கும் ஒதுக்கப்படவேண்டுமெனக் குறிக்கப்பட் டிருந்தது.

இப்படியாகச் சொல்லிக்கொண்டு போனால் அநேக உதார ணங்களை என்னாற் குறிப்பிட முடியும்.

ஈழத் தமிழரின் பூர்வீக பூமிகள் இங்ஙனம் பறிகொடுக்கப் படுகின்றனவே! உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(ஆ) ஈழம்தமிழ் இன மக்களின் காணிப்பதிவு

ஈழம்தமிழ் மகன் காணி பூமி வாங்கி அக் காணியைத் தன் பேரில் பதிவுசெய்ய எத்தனித்தால், அவர் 1949ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்திருந்தால் அவருடைய தகப்பனாரும், பாட்ட னாரும் 1949ஆம் ஆண்டுக்குமுன் இலங்கையிற் பிறந்தவர்கள் என்று காணிப் பதிவுகாரியஸ்தருக்கு ஒப்பேற்ற வேண்டும். இந்த விபரத்தேவை சிங்கள அரசாங்கத்தால் தமிழருக்கு விரோதமாக உண்டாக்கப்பட்டது.

(இ) ஈழம்தமிழ் பிரதேசத்தில் அபிவிருத்தித் திட்டங்கள்.

1969ஆம் ஆண்டில் சமஷ்டிக் கட்சியினரின் மகாநாட்டை உடனடியாகப் பின்தொடர்ந்து பத்திரிகைகளில் வெளிவந்த புதினப்படி (டெயிலி நியூஸ் பத்திரிகைச் செய்திப்படி) "சிங்கள தமிழ் துவேஷமோ பாகுபாடோ நாட்டின் பல்வேறு அபி விருத்தித் திட்டங்கள் சம்பந்தப்பட்டவகையில் உட்புகுத்தப் பட்டுள்ளன என்னும் சிக்கலான பிரச்சினைக்கு உண்மையின்

அடிப்படையில் எதுவித ஆதாரமும் கிடைக்காது. உற்று நோக்குமிடத்து— சிமெந்து, கடதாசித் தொழிற்சாலைகள் ஆகிய இலங்கையின் இரண்டு முக்கியமான, ஆதாயமான தொழிற் சாலைகள் முறையே வடக்குக் கிழக்கு மாகாணங்களிலேதான் நிறுவப்பட்டுள்ளன. காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருப்பது வடபகுதியை அலட்சியம் செய்துவிட்டதென்று கருத்தாகுமா? அன்றி திருகோணமலை அபிவிருத்திபற்றி விபரமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் நோக்கத்துடன் நியமிக்கப்பட்டுள்ள கொமிஷன் அங்குள்ள தளத்தைக் கவனியாமற் கைவிடப்பட்டதாகக் கருதப்படவும் மாட்டாது.'' இப்படிப் 'பசை பூசும்' பத்திரிகை எழுத்து படு பொய்யானது; உண்மையைப் பரிகசிப்பதுமாகும்.

1952ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஈழம் தமிழ் பிரதேசத்தில், அதாவது வடக்கு, கிழக்கு மாகாணங்களில், ஒருவிதமான அபிவிருத்தித் திட்டங்களும் ஆரம்பிக்கப்படவில்லை. இதற்கு ஒரு புறநடையாய் இருப்பது, கல்லோயாப் பள்ளத்தாக்கிலுள்ள சீனித் தொழிற்சாலையே யாகும். உண்மை நிலைமை என்ன வென்றால் துணுக்காயில் நிறுவப்படவேண்டிய ஒரு சீனித் தொழிற்சாலை கந்தளாயில் ஸ்தாபிக்கப்பட்டது. இப்பகுதியி லுள்ள மக்கள் அனைவரும் இலங்கையின் தெற்கு, மேற்கு மாகாணங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட சிங்கள மக்கள்தான். இப்பொழுது இந்தத் தொழிற்சாலையைப்பற்றியதோர் ருசிகர மான கதை ஊரெங்கும் பரவியுள்ளது. அது எவ்வளவுக்கு உண்மையானது என்பதை என்னால் எடுத்துச் சொல்ல முடியாது. அதாவது, கந்தளாய் சீனித் தொழிற்சாலை, மதுபான உற்பத்தித் தொழிற்சாலையாகி ''கந்தளாய் கசிப்புத் தொழிற் சாலை'' என்று வழங்கப்படுவதாக என் காதுகளிற் கேட்டன!

1954இல் அல்லது 1955இல் காங்கேசன்துறையில் பெரும் துறைமுகம் கட்டும் வைபவம் தமாஷ் வேடிக்கையாகவே நடந்து முடிந்தது. காங்கேசன்துறையில் குத்துவிளக்குகள் கொளுத்தப் பட்டன; தேங்காய்கள் உடைக்கப்பட்டன. இதன் எதிரொலி: காலியிலே இரண்டரைக்கோடி ரூபா செலவில் ஒரு துறைமுகம் ஆரம்பிக்கப்பட்டுத் தற்போதுதான் முடிவடைந்துள்ளது. ஆனால் காலித் துறைமுகத்தால் அதிக நன்மையோ ஆதாயமோ கிடையாது. காங்கேசன்துறைப் பெருந்துறைமுக அபிவிருத்தி, சேதுசமுத்திர அபிவிருத்தித் திட்டத்திற்கு அத்திபாரமாகவும் அணிகலனாகவும் அமையும். இந்திய அரசாங்கம் எடுத்துக் கூறிய நீர்க்கமான உண்மைகளும் செவிடன் காதில் ஊதிய சங்காய்விட்டதே.

சுதந்திர இலங்கை அரசாங்கத்தின் மந்திரி கௌரவ. சு. நடேசபிள்ளையின் உற்சாக மூட்டும் முயற்சியால் இற்றைக்கு 14 வருடங்களுக்கு முன்னர் இந்த அத்திபாரமிடும் ஆலாத்தி வைபவங்கள் நடைபெற்றன. இப்போதும் காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்தியானது ஒரு ''கடதாசித்திட்டம்'' ஆகவே இருக்கின்றது என்பது விஷயமறிந்தவர்களின் ஆலோசனை.

பிரித்தானியர் அரசாட்சிக் காலத்தின்போது வெளிமாவட்ட துறைமுகங்களின் அபிவிருத்திபற்றிய பாளிமெந்து அறிக்கைப் பத்திரம் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. அதில் காங்கேசன் துறைமுகம் முதலிடம் பெற்றிருந்தது. இலங்கைத் தீவின் வெளி மாவட்ட துறைமுகங்கள் கட்டும் திட்டத்தில் காலித் துறைமுகம் அபிவிருத்திக்கு அனுகூலமானதாயிருக்கவில்லையெனக் கருதப் பட்டுத் தற்காலிகமாகக் கைவிடப்பட்டிருந்தது. இப்போது காலித் துறைமுகம் ''வாய்ப்பேச்சுத் திட்டம்'' என்ற அளவு கடந்து ''செயல்முறைத் துறைமுகமாய்'' விட்டது. இதனால் அரசாங்கத்திற்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எதற்காக அரசாங்கம் இப்படி நஷ்டமடைய வேண்டும்?

1956ஆம் ஆண்டில் காங்கேசன்துறைமுகத்தை நல்ல வசதிகளுடன் நவீனமாதிரியாகக் கட்டி நிறைவேற்ற அமெரிக்க அரசாங்கம் அக்கறைகொண்டு ''நோக்கமறியும் நுணுக்கம்'' வகையில் ஆராய்ச்சி செய்து அரசாங்க, அரசியல் வட்டாரங்களுடன் கருத்துரை பரிமாறியதை இந்த நூல் ஆசிரியருக்கு நன்கு தெரியும்; வேணுமென்றே எதையும் தட்டிக்கழிக்கும் சிங்கள ஆதிக்க அரசாங்கம் அமெரிக்காவின் இந்த ''நோக்கமறியும் நுணுக்கம்'' விருப்பத்திற்கு இசைந்துபோகவில்லை. காரணம் காங்கேசன்துறைமுகம் தமிழ் ஈழப்பிரதேசத்தில் இருப்பது தான் என்று கூறுவதன்றி வேறு எவ்வித உதாரணத்தைக் கற்பனை செய்ய முடியும். தற்போதுதான் 5-11-1969இல் பிரதமர் டட்லி சேனனாயக்காவின் வடபகுதி விஜயத்தை முன்னிட்டு இத் துறைமுகத்திற்கு அத்திபாரக்கல்லு இடும் வைபவங்கள் நடை பெற்றிருக்கின்றன. ஆனால் 1954ஆம் ஆண்டில் தேங்காய் உடைத்ததுபோல 1969ஆம் ஆண்டிலும் அத்திபாரக்கல்லு முடியுமோவென்று சந்தேகப்படவேண்டியதாய் இருக்கின்றது.

ஈழத்தமிழ் மக்களின் பிழைப்பிற்கு வடக்கிலும், கிழக்கிலும், 1956ஆம் ஆண்டுக்குப்பிறகு எவ்விதமான கைத்தொழிற்சாலைகளும் உற்பத்தியாக்கப்படவில்லை.

சீமெந்துத் தொழிற்சாலையும் கடதாசித் தொழிற்சாலையும் கட்ட ஆரம்பிக்கப்பட்டது, டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் இலங்கை இருந்தபோதாகும். அப்போது சுதந்திர இலங்கை

என்று ஒன்றுமிருக்கவில்லை ; தமிழ் சமஷ்டிக்கட்சியுமிருக்கவில்லை. உண்மையில் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை முன்னை நாள் சட்டசபை உள்நாட்டு மந்திரி சேர் அருணாசலம் மகாதேவாவினால் ஆரம்பிக்கப்பட்டது ; பின்னைநாள் சுதந்திர இலங்கையின் மந்திரி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் காலத்தில் பூர்த்தியாக்கப்பட்டது ; பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவினால் ஒளிவிளக்கேற்றித் திறந்து வைக்கப்பட்டது. (காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் தற்போது கிட்டத்தட்ட 100 சிங்கள மேலதிகார உதவி உத்தியோகத்தர்கள் பயிற்சி பெற்று வருவதாகவும், அவர்களில் எல்லோரும் எஸ். எஸ். ஸி. வகுப்புப் படித்துத் தேறுதவர்கள் என்றும், ஆனால் ஈழத் தமிழ் எஸ். எஸ். ஸி. யில் சித்தியெய்திய இளைஞர்களை அவர்களுக்குக் கீழ் வேலைக்கமர்த்தி வைத்துக்கொண்டு தங்கள் பெருமையைக் காட்டி வருகிறார்கள் என்றும் அறிகிறேன். காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையில் உள்ள கிளிங்கர், காலியிலே புதிதாக சிங்கள மக்களுக்குப் பிழைப்புக் கொடுக்கும் நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்டது. இதனால் ஈழம் தமிழ் மக்களுக்கு இருக்க வேண்டிய பிழைப்புக் குறைந்துவிட்டது.

வாழைச்சேனையில் கடதாசித் தொழிற்சாலை பற்றிய விபரங்களை இப்போது என்னால் திட்டவட்டமாக இங்கு குறிப்பிட முடியவில்லை.

கடந்த இருபதாண்டு காலத்தில் சிங்களப் பிரதேசத்தில் ஒப்பேற்றப்பட்ட கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களோடு ஈழத்தமிழினத்தின் பிரதேசத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஈழத்தமிழினத்தின் பகுதி நஞ்சுமனப்பான்மையோடு கொஞ்ச மேனும் கவனிக்கப்படாமலிருப்பதை எண்ணி உள்ளம் கொதிக்கின்றதே.

காட்போட்மட்டைக் கடதாசி ஆலைகள் (Paper Board Mills) இரண்டிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. ஒன்று எம்பிலிப்பிட்டியாவிலும் மற்றது தெற்கு மாகாணத்தில் ஒரு பகுதியிலும் ஸ்தாபிக்கப்படவிருக்கின்றன.

ஜேர்மனியிலிருந்து இங்கு தருவிக்கப்பட்ட கடதாசித்தொழிற் சாலை நிபுணர்கள் தெரிவித்த அபிப்பிராயப்படி, தக்க மாற்றங்கள் செய்துவிட்டால், வாழைச்சேனைக் கடதாசித் தொழிற்சாலையிலிருந்து மிக மலிவானதும் ஆதாயமானதுமான உற்பத்தியைப் பெருக்கி, முழு இலங்கையின் தேவையையும் வாழைச்சேனைத் தொழிற்சாலைமூலம் பூர்த்தி செய்துகொள்ளலாம் என்பதாகும். எதற்காக இவ்வித குறும்புத்தனமான முறையற்ற வீண் செலவு

களைச் சிங்கள அரசாங்கம் செய்யவேண்டும். சிங்களப் பகுதிகளில் காட்போட் மட்டை உற்பத்தியை ஆரம்பித்ததனால் என்ன ஆதாயம்?

அரசாங்கத்துக்கு உட்படாத ஒரு கோஷ்டியினருக்கு, கண்டியில் ஒரு நெசவு ஆலையை உற்பத்தி செய்தால் சகல வசதிகளையும் செய்து கொடுப்பதாக சிங்கள அரசாங்கம் இணங்கியுள்ளது. பிற ஊர் நாணயமாற்று வசதி, எல்லாவித ஏற்று, இறக்குமதி களுக்குமான அனுமதிகள் முதலாய யாவையும் அரசாங்கம் செய்து கொடுக்க முன்வந்துள்ளது.

வியாங்கொடையில் விசாலமான சேலை நெசவு உற்பத்திச் சாலை ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஐந்து கோடி ரூபாய் பெறுமதியுள்ள புதியதொரு பிரமாண்டமான சேலைத் தொழிற் சாலை ஒன்றைப் பிரதமர் டட்லி சேனனயக்காவின் தொகுதிக் கருகாமையில் துல்லேரியா என்னுமிடத்தில் ஸ்தாபிக்கின்றனர்: இதற்கு 4 கோடி ரூபாய்கள் செலவிடப்படும் என மதிப்பீடு செய்யப்பெற்றுள்ளது.

இந்த இடத்தில் தக்கதோர் கேள்வி கேட்கத்தான் வேண்டும்: ஈழத்தமிழகத்தின் எப்பகுதியிலேனும் ஒருசேலை நெசவு ஆலையைக் கூட அரசாங்கம் தொடங்கவில்லையே!

(1) களனியாவில் ''ரையர்'' (Tyre) தொழிற்சாலை,

(2) ஒறுவலையில் உருக்கு இரும்புத் (Steel) தொழிற்சாலை,

(3) யக்கலையில் இரும்புத் (Iron) தொழிற்சாலை,

(4) எந்தரமுல்லையில் யந்திர உருக்கு ஆலை,

(5) பிலியந்தலையில் (பிங்கான் செய்யும்) பிங்கான் கோப்பை உற்பத்தி ஆலை,

(6) காலியிலுள்ள கிளிங்கர் (சிமெந்து அரைக்கும்) ஆலை,

(காலி சிமெந்து தொழிற்சாலைக்கு கிளிங்கர் சிமெந்து அரைப்பதற்கு காங்கேசன் தொழிற்சாலையே உதவி வந்தது. தற்போது ஜப்பானிலிருந்து கிளிங்கர் சிமெந்து இறக்குமதி செய்விக்கின்றனர். இதனால் காங் கேசன் தொழிற்சாலை அபிவிருத்தியை மேற்கொண்டு பொறுப்பேற்காமல் நிறுத்தி வைக்கலாம் என்பதே உள்ளான நோக்கமாகும்.)

(7) அவிசாவலையில் புதியவொரு ''பிளவுட்'' ஒட்டுப் பலகைத் தொழிற்சாலை,

(8) பொலநறுவையிற் பாற்பண்ணை உற்பத்தித் தொழிற் சாலை.

(9) கொழும்பில் கோதம்பைமா அரைக்கும் ஆலை.

(10) ஹொணுப்பிட்டியில் உரப்பசளை உற்பத்தி ஆலை.
(ஆரம்பத்தில் இந்த ஆலை வடபகுதியில் மாங்குளத்தில் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றே பிறநாட்டு நிபுணர்கள் சிபார்சு செய்தனர்.)

(11) முகமத்தில் பால்மா உற்பத்தி ஆலை.

இப்படி இன்னோரன்ன பலவகைத் தொழிற்சாலைகள் சிங்களப் பிரதேசத்தில் தோற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகளில் ஈழத்தமிழருக்கு ஒருவித வேலைவாய்ப்பு மில்லை.

இன்னுமோர் சம்பவம்: பரந்தனிலிருக்கும் கெமிக்கல் தொழிற்சாலை — விஞ்ஞான கலாநிதி (டாக்டர்) சுந். ஞானலிங்கம் அவர்களின் அயராத பெரும் முயற்சியால், தற்போது நல்லமாதிரித் திறம்பட நடக்கும் தொழிற்சாலையாக வந்த பின்னரும் — தென்பகுதிக்கே அதை அகற்றி விடுவதற்கு ஓர் கெடுபிடி முயற்சி மேலிடத்தில் நடைபெற்றதும் பகிரங்க இரகசியம்! இதன் மர்மம் என்னே?

ஈழத் தமிழ் இனம் முன்னேற்றத்திற்கு வராமல் சிங்களரின் அடிமைகளும் கூலிகளுமாகச் சீவிக்க வேண்டுமென்ற நோக்கமேதான்.

பிரதமர் டட்லி சேனநாயக்கா சிங்கள — தமிழ் சமூகங்கள் இரண்டினையும் சரிசமனாக நோக்கி ஓரவஞ்சமற்ற முறையில் நடந்துகொள்ளுகிறார் என்று எவர்தான் கூறமுடியும்? "சிங்களம் மட்டும்" அரசகரும மொழிச்சட்ட மசோதாமீதான வாக்கெடுப்பின்போது போட்ட ஐந்து வாக்குகளில் பிரதமர் டட்லியும் ஒருவர். இன்னும் விசேடமாக, டி. எஸ். சேனநாயக்கா இலங்கை முழுவதும் சிங்களம்—தமிழ்—ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் சரிநிகர் சமானமான முறையில் உத்தியோக மொழிகளாக வைத்திருக்கவேண்டும் என்னும் கொள்கையை உறுதியாக எடுத்துச்சொல்லிக் கடைப்பிடித்தார்; அவரின் மகன் டட்லி தனிச்சிங்களச் சட்டத்திற்குச் சாய்ந்து கொடுத்தார் என்பதே குறிப்பானதாகும்;

நிரந்தரக் காரியதரிசிகளைக் கொண்ட திருகோணமலைச் சீரமைப்புச் செயற்குழு ஒரு வெறும் கண்துடைப்பாகும். இதில்

அங்கத்துவம் வகித்தோர் பிரதமரின் தயவை நாடிநின்றவரே யாவர். பிரதம மந்திரியும், ஆத்திரமடைந்த அரசியல் செல் வாக்கில் ஆசையுள்ள பௌத்த பிக்குகளை சமாதானஞ் செய்ய, அரசியல் அகம்பாவ மனநோக்குடைய அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறிய புதைபொருள்ஆராய்ச்சித்துறைப் படிப்பாளிகளைத் திருப்திப்படுத்த, முழு இலங்கைப் பௌத்த காங்கிரஸின் தீவிரத் தனமான இணைக்காரியதரிசியினது கூக்குரலை மழுப்பிவிடுவதற் காக, சந்தர்ப்ப சூழ்நிலைக் கேற்றவாறு, கையாண்டதோர் திட்டம் இதுவாகும்.

திருகோணமலையில் சர்வகலாசாலை ஒன்றைத் தாபிக்கும் விடயம் இற்றைக்குக் கிட்டத்தட்ட பத்துவருடங்களுக்கு முன்னர் எல்லாத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து ஆரம்பித்தவிடய மாகும். அந்த நாளில் ஆதிக்கத்திலிருந்த அரசாங்கத்தின் ஆதர வும் ஆசீர்வாதமும் இதற்கிருந்தது. இதன் அத்திபாரக்கல் நாட்டு விழாவுக்கு அன்றைய அரசாங்க அதிபரும் சமுகமளித் திருந்தார். அந்தச் சர்வகலாசாலை இப்போது எங்கே? அது, பழமொழியில் வருவதான, சிங்கள நரியின் நாலுகால் விலங்கின் தந்திர வியூகாட்டில் சிக்கியிருக்கிறதா? (அல்லது இரண்டுகால் பிராணியின் கண்ணும்பூச்சி விளையாட்டா). எதிரியை மடுத்த டிக்க இதுவுமோர் தந்திரம். ஆனால் ஈழத்தமிழ் வாக்காளர்கள் போதியளவு கூர்மை நேர்மை உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதே பலரின் நம்பிக்கையாகும். எதிர்வரும் தேர்தலில் ஈழத் தமிழ் வாக்காளர்கள் தமது தலைவர்களை இந்தப் பழமொழி யில் சிக்குப்பட்டுத் தவிக்க விடாது பாதுகாப்பாக வைத்திருப் பார்கள் என்று நம்புகிறேன்.

உற்பத்திக் கைத்தொழிற் பொருள்களை உள்ளூரிற் செய் விக்க இங்கு தேவையான சகல மூலப்பொருள்களையும் ஈழம் தமிழ் மக்கள் இறக்குமதி செய்யமுடியாத வகையில் (லைசென்ஸ்) உத்தரவுப் பத்திரம் வழங்குதலில் பாதகமான பாரபட்ச நட வடிக்கைகளை மேற்கொள்வது கவலைக்குரியதோர் விடயமாகும்.

வடபகுதியிலுள்ள தொலைபேசி, தந்திப் போக்குவரத்துச் சேவைகள் பழையமுறையிலிருப்பதோடு வலுவற்றிருக்கின்றன. அடிக்கடி செயற்படாது பல இடையூறுகள் ஏற்படுகின்றன. சிறந்த இக்காலவசதிகளடங்கிய தொலைபேசி உபகரணம் ஒன்று தருவிக்கப்பட்டதும், கொழும்பில் வந்து இறங்கியதும், உடன் காலிக்கு மாற்றப்பட்டதும் பகிரங்க இரகசியமாகும்.

இந்த ஆணித்தரமான உண்மைகள் தமிழ்ஈழம் பகுதியை அரசாங்கம் அபிவிருத்தி செய்வதில் துவேஷமும் பாகுபாடும்

ஓரவஞ்சகமுமாக நடந்துவருகின்றது என்பதனை வெளியாக எடுத்துக் காட்டுகின்றன. இதைச் செய்பவர்கள் சிங்கள அரசியல் வாதிகள். செயற்படுத்துவது சிங்கள அரசாங்கமேயாகும் என்பது நிரூபிக்கப்படுகின்றதல்லவா? ஈழத்தமிழ் இன சுதந்திர தனி அரசை மறுபடியும் உருவாக்குபவர்களுக்கு இச் செயல்கள் மிகுந்த குழப்பத்தையும் இடைஞ்சலையும் உண்டுபண்ணிவிட்டன.

எப்படியாயினும் ஈழத் தமிழ் இன சுதந்திர தனி அரசை மறுபடி உருவாக்கவேண்டும். இக்கருத்துப் பற்றி ஐக்கிய இராச்சியத்தின் அதாவது இங்கிலாந்தின் இராஜப்பிரதிநிதியாக இலங்கையிற் செயலாற்றிய சேர் செசில் சயர்ஸ் என்பவரும், சுதந்திர இலங்கையினை உருவாக்கிய அரசியல் சட்டத்தின் கர்த்தாக்கள் இருவரில் ஒருவரான சோல்பரிப் பிரபுவும் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்துள்ளனர். அவர்கள் எண்ணப்படி ஈழத்தமிழ் இன சுதந்திர தனி அரசை மறுபடியும் உற்பத்தி யாக்க ஒரு இடையூறு இருக்குமானால், அது அவ்வித அரசின் அனுகூல ஆதாரத்தைப் பாதுகாக்குமளவுக்கு எம்மிடம் "பொருளாதார சுபிட்சம் போதாது" என்பதேயாகும்.

தமிழ் ஈழத்தின் பொருளாதார மேம்பாடு, தொழில்வளம் என்பன இலைமறைகாய்போல மறைந்துகிடப்பதை எவருமறியார் முதற்கண் தமிழ்ஈழம் தோற்றுவிக்கப்பட்டபின் அதன் தாற் பரியம் பற்றி உடனடியாக யாவருமுணரமுடியும். கற்பனையோ அன்றிக் கவலையோ வேண்டுவதில்லை.

மனப் புண்பாடு, — 7

தமிழ் ஈழத்தில் முஸ்லிம் மக்களினது கதி

இற்போது, தமிழ் ஈழத்திலே முஸ்லிம் மக்களின் நிலைமை எப்படி அமைந்துள்ளது என்பதற்கு, முன்னைநாள் மக்கள் பிரதிநிதிகள் சபை அங்கத்தவரும், சபாநாயகருமான கனம் எச். எஸ். இஸ்மாயில் அவர்கள் பத்திரிகை மூலம் வெளியிட்ட கருத்துக்களிற் கூறியவற்றை மீட்டும் ஞாபகமூட்டிச் சிந்தித்துத் தெளிவதிலும் பார்க்கத், திறமான வேறு ஆதாரம் எதுவும் காட்டவேண்டிய் அவசியமில்லை.

'' இலங்கைவாழ் ஈழம் தமிழர்கள் தங்களுக்கென்றோர் தனி நாடு 'ஈழம்' என்று கோருகின்றார்கள். கண்டிச் சிங்களர்கள் தங்களுக்கென்றோர் 'கண்டி நாடு' கோருகின்றார்கள். ஆனல் கரைநாட்டுச் சிங்களர்களோ தொடர்ந்து இலங்கை முழுவதையுமே கட்டியாண்டுகொண்டிருக்கின்றார்கள். இந்த ரீதியில் இலங்கையர்களில் அடுத்தபடி எண்ணிக்கொள்ளப்படவேண்டியவர்கள் முஸ்லிம் சமூகத்தினரேதான். இன்றைய சூழ்நிலையில், இனி மேல், முஸ்லிம்களாகிய எமது கதி என்ன என்ற குரலை எழுப்பி ஆழ்ந்து சிந்தித்துச் செயலாற்றவேண்டிய நிலையிலுள்ளவர்கள் முஸ்லிம்களேதான். கீழ்க் குறிக்கப்படும் உண்மைக் காரணங்களின் அடிப்படையில் நான் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளேன்:

1. அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் தக்க தகுதிவாய்ந்திருந்த காரணத்தைக் கருதி அதிகதொலைவுக்கு அனுப்பினல் வசதிக்குறைவுகள் பல அவருக்குண்டாகுமெனக் குறிப்பிட்டு, அவரின் பிறப்பிடத்திற்கு அண்மையில் கடமைக்கு அமர்த்தும்படி கோரி, அந்த நியமனத்திற்குப் பொறுப்பான அரசாங்கப் பிரிவின் மேலதிகாரியைப் பேட்டியில் கண்டு நான் ஒருசமயம் கதைத்தேன். அவருடைய பதில் பின்வருமாறு:

   '' முஸ்லிம் ஒருவரைச் சிங்களப்பகுதிக்கனுப்புவதென்பது முடியாத காரியம்; அப்படி முஸ்லிம் அதிகாரி ஒருவரைச் சிங்களப் பகுதிக்கு அனுப்பினல் அப்பகுதி மக்களிடமிருந்து எதிர்ப்புக் கோஷங்களும் துவேஷப் பிரசாரமும் எனக்கெதிராக உருவெடுப்பதோடு அத் தொகுதி எம். பி. யின் வெறுப்பையும் நான் சம்பாதிக்க நேரிடும்'' என்பதாகும்.

2. முஸ்லிம் மக்கள் கூடித் தமது சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்த கூட்டமொன்றுக்குத் தலைமை தாங்கினேன். இந்தக் கூட்டத்தின் முடிவில் ''சேவிஸ் சிவில்

இன்டர் நாஷனல்'' என்னும் ஸ்தாபனத்தில் கடமையாற்றிய முஸ்லிம் ஒருவர் கீழ்க்கண்டவாறு தனது கவலைக்குரலில் விண்ணப்பித்தார். ''முஸ்லிம் ஒருவரையேனும் அந்தக் குடியேற்றத்தில் எடுக்கக்கூடாது'' என்று மேலிடத்திலிருந்து கட்டளை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். அதன்படி முஸ்லிம்கள் பலர் விண்ணப்பங்களை அனுப்பியிருந்தும் ஒரு முஸ்லிமையும் தெரிவு செய்யவில்லையென்றும் கூறக்கேட்டுக் கவலையும், வியப்புமடைந்தேன்.

3. கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ்க் குறிப்பிட்ட ஒரு கிராமத்தில் சில முஸ்லிம் மக்கள் தங்களுக்குக் காணி தரும்படி கோரி விண்ணப்பம் செய்திருந்தார்கள். இந்த விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஈழத்தமிழ் முஸ்லிம்மக்களுக்கென ஒரு பகுதியும் ஒதுக்கி விடப்பட்டது. இது நடந்து ஒரு சில நாட்களுள் சிங்கள மதகுரு பீடங்களும் பௌத்த குருமாரும் சேர்ந்து ஏராளமான சிங்களக் காடையர்களைத் தருவித்து ஒதுக்கப்பட்ட முழுக்காணியையும் அடாத்தாகக் கைப்பற்றினர்கள். பின்னர் அத்துமீறிக் குடியேறிய அந்தச் சிங்களக் காடையர்களுக்குச் சிங்கள அரசாங்கம் காணிகளை முறையாக ஆட்சிகொடுத்துவிட்டது.

4. முஸ்லிம் மேலுத்தியோகத்தர் ஒருவர் ஒரு பகுதிக்கு அரசாங்க நிருவாக முறையில் நியமிக்கப்பட்டார். அப்போது அங்கே நிலவிய ஒழுங்கற்ற சூழ்நிலையைச் சீர்ப்படுத்தி ஒழுங்கை உடனடியாக நிலைநாட்டினார். ஆனால் அவருக்குக் கீழ் ஊழியம் செய்த மற்றும் சிங்கள உத்தியோகத்தர்களும், சிங்களச் சனங்களும், பௌத்த குருமாரும் சேர்ந்து சில நாட்களுக்குளெல்லாம் அந்த முஸ்லிம் மேலுத்தியோகத்தர் தனது நிர்வாகக் கடமையைச் சரிவர நிறைவேற்ற முடியாதவாறு பல தொல்லைகளை உண்டுபண்ணத் தொடங்கிவிட்டார்கள். அந்த மேலுத்தியோகத்தர் தன்னை வீண் தொல்லையிலிருந்து நீக்கிவிடும்படி கேட்டு, கொழும்பு அரசாங்கத் தலைமைக் காரியாலயத்திற்கு மாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார்.

இதுபோன்று இன்னும்பல உதாரணங்களை எடுத்துச் சொல்ல என்னால் முடியும்; ஆனால் அவ்வண்ணம் செய்து விவரங்களை அதிகரிக்காமல் விடுகின்றேன். இச் சந்தர்ப்பத்தில் மூன்று கோரிக்கைகளைக் கேட்கவேண்டியது என் கடமை:

* முஸ்லிம் மகன் ஒருவர் சிங்கள அல்லது தமிழ் பகுதியிலே உத்தியோகம் பார்க்கும் உரிமையற்றவரா?

* முஸ்லிம்கள் குடியேற்றத் திட்டங்களில் குடியேறும் உரிமையை இழந்துவிட்டார்களா? இல்லையா?

* முஸ்லிம் மதத்தவர் ஒருவருக்கு (நீதிபரிபாலனப் பகுதியல்லாத அரசாங்க மேலிடங்களில்) நிர்வாகப் பொறுப்புள்ள பெரும் உத்தியோகங்களை வகிக்கும் உரிமை வழங்கப்படமுடியாதா? பெரிய உத்தியோகங்களில் கடமையாற்ற முஸ்லிம் மக்களுக்கு இயலாதா?

எல்லா ஈழத்தமிழ் மக்களதும் கதி இதேமாதிரித்தான். அவர்கள் சைவர்களாயிலென், முஸ்லிம்களாயிலென், கத்தோலிக்கராயிலென் அல்லது மற்றும் கிறிஸ்தவராயிலென் பௌத்த சிங்களரின் ஆதிக்கத்திலுள்ள அரசாங்கத்தின்கீழ் யாவும் பாரபட்சமாகத்தான் நடக்கின்றதென்பது வெளிப்படை. வடமாகாணத்திற்குத் தெற்கே, கிழக்கு மாகாணத்திற்கு மேற்கே நடக்கும் எத்தனையோ குடியேற்றத் திட்டங்களில் ''மருந்துக்கொரு'' தமிழரையேனும் குடியேற்றவில்லை. ஆனால் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள குடியேற்றங்களில், அதுவும் கிழக்கு மாகாணத்திலுள்ள குடியேற்றத்திலும், இன்னும் குறிப்பாகப் புத்தளம், சிலாபம் பகுதிகளிலும், ஈழத் தமிழ்மக்களை நடத்த வேண்டிய மாதிரி நடத்தாது சிங்களர்களுக்கே சந்தர்ப்பம் அளிக்கிறார்கள். சட்டப்படி முடிக்குரிய காணிகளை முதலில் அந்தக் காணிகளுக்கு அருகாமையிலிருப்பவர்களுக்கே வழங்கவேண்டும். இந்த நிலைமை பௌத்த சிங்கள அரசாங்கத்தினால் விஷமத்தனமாக மீறப்பட்டு வருகிறது என்று ஏற்கெனவே காட்டியுள்ளேன்.

உதாரணங்கள்:

1. திருக்கோணமலையில் பிரிட்டிஷ் கடற்படைத் தளங்கள் மூடப்பட்டபோது வேலையிழந்த 400 ஈழத் தமிழர் நல்வாழ்வு பெறவென்று ஈழம் தமிழ் பகுதியிலுள்ளதான பதவியில் குளம் குடியேற்றத்திட்டத்தின் கீழ்க் குடியேற்றப்படுவதற்கெனத் திருக்கோணமலைக் காணிக் கச்சேரியில் தெரிவுசெய்யப்பட்டனர். தென்னிலங்கையிலும் மேற்கு இலங்கையிலும் இருந்து கொண்டுவரப்பட்ட சிங்களக் காடையர்கள் இந்த அப்பாவிகளான ஈழத் தமிழ் மக்களை அடிக்கப் பயமுறுத்தியதுமல்லாமல் கொலை செய்வோமென்றும் திட்டம் செய்தனர். பிரதம மந்திரியாரை எச்சரிக்கை செய்தனர். இதற்கு அஞ்சிய சிங்கள அரசாங்கம் இந்தத் தமிழர்களை அவ்விடங்களிற் குடியேற்ற மறுத்துவிட்டது.

2: இன்னுமோர் மத்திய வகுப்பு ஈழம் தமிழ் விண்ணப்பக் காரர்கள் திருக்கோணமலைக் காணிக் கச்சேரியில் இதிலும் கேவலமான முறையில் நடத்தப்பட்ட முறை பற்றிய விபரம் 6 ஆவது மனப்புண்பாட்டின்கீழ் விபரிக்கப்பட்டிருப்பதையும் கண்டுகொள்க.

ஈழத் தமிழ் இனமே! எங்கள் கதி என்ன? எதிர்கால சந்ததியின் நிலை என்ன? முஸ்லிம் தமிழ் மக்களின் முன்னேற்றம் என்னயிற்று? எண்ணிப்பார்!!

மனப் புண்பாடு, — 8

ஈழம் தமிழ் இன மக்களின் விவாகப்பதிவு

ஈழத்தமிழர்களுக்கு விவாக சம்பந்தத்திலும் இடைஞ்சல் இருக்கவே செய்கின்றது. தென்னிலங்கையில் விவாகப் பதிவுகாரர் கந்தோர்களில் பதிவுகாரர் தமிழராக இருந்தாலும் விபரங்கள் பதிவுப்பத்திரத்தில் சிங்கள பாஷையில் நிரப்பப்படல்வேண்டும். இதன்பிரகாரம், சம்பந்தப்பட்டோர் சிங்களர்கள் என்ற அபிப் பிராயத்தைக் காட்டவேண்டும் என்பதற்காக விபரங்களைச் சிங்களத்தில் இடாப்புப் புத்தகத்தில் நிரப்பியே சடங்கினை நிறை வேற்ற வேண்டும். அண்மைக்காலம்வரை ஈழத்தமிழர்களின் விவாகம் அவர்களின் விருப்பத்திற்கிணங்க தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதிவு செய்யலாம். ஆனால் இப்போது அந்த உரிமையையும் ஈழத்தமிழ்மக்கள் இழந்துவிட்டனர்.

விவாகமாகவிருக்கும் ஈழம் தமிழ் மக்கள், மணமகனை அல்லது மணமகளோ சரி தமது விபரங்களை ஒரு விவாகப் பதிவுகார ருக்குத் தமிழிற் சமர்ப்பித்தால் அவர் தாம் ஈழத் தமிழரேயன்றி இந்தியத் தமிழர் அல்லர் என்பதை அந்த விவாகப் பதிவுகார ருக்கு நிரூபிக்கவேண்டும். 1949ஆம் ஆண்டின் பின் பிறந்தவ ராஞல் தந்தையின் பிறப்புச் சாட்சிப் பத்திரமும் தந்தையின் தந்தையார் பிறப்புச் சாட்சிப் பத்திரமும் அதற்குச் சான்றுக அணைக்கப்படல் வேண்டும். 1949க்கு முன் பிறந்திருந்தால் தகப்பனுர் பிறப்புப் பத்திரம் மட்டும் போதுமானது. அல்லா விடின் இந்தியத்தமிழர் எனப் பதியப்படுவர். தகப்பன் பெயர் சாதி இன விபரம் அந்த விவாகப் பதிவின்போது இந்தியத் தமிழர் எனப் பதியப்பட்டிருந்தால் அந்த விவாகத்தினுற் பிறக்கும் பிள்ளைகள் 'இந்தியத் தமிழர்' என முடிவு செய்யப் படுவர்.

ஈழத் தமிழ் பெண்ணொருத்தி இந்தியத் தமிழ் ஆண்மகனை விவா கம் செய்தால் அந்த மணமகன் சைவனுகவோ அல்லது முஸ்லிம் ஆகவோ இருந்தால் எந்த நேரகாலத்திலேனும் அவரை இந்தியர் என்ற தோரணையில் விவாகமான மனைவியிடமிருந்து பிரித்து இந்தியாவுக்கு நாடுகடத்தச் சட்டம் இடம் கொடுக்கின்றது. அந்தப் பெண்மணி இலங்கைப் பிரதமரிடம் போய் இரந்து குளறி அழுது கண்ணீர்விட்டுப் புலம்பினுலும்கூட எதுவித பலனும் கிட்டாத பரிதாப நிலைமைதான் எதிர்நோக்கியிருக்கும்.

அகில உலக மனித உரிமைகள் பிரகடனம் 15ஆம் கோட்பாட்டின்படி : ''சாதி, இனம் அல்லது மதம் ஆகியவற்றினால் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி பராயம் வந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் தமது விருப்பப்படி விவாகம் செய்துகொள்ளவோ, குடும்பம் நடாத்தவோ சட்டப்பிரகாரம் சகல உரிமைகளு முண்டு. விவாகத்தின் போதும் விவாகத்தின் பின்னரும், விவாகத்தை ரத்துச் செய்ய நேரினும் மணமகன், மணமகள் ஆகிய இருவருக்கும் சட்டவழக்கப்படி சம உரிமை சந்தர்ப்பங்களுண்டு''. இந்தக் கோட்பாடு மீறப்பட்டுவிட்டது.

விதியின் விளையாட்டோ அல்லது மதியின் சதிமோசமோ எனச் சற்றுச் சிந்தியுங்கள் !

மனப் புண்பாடு, — 9

ஈழம் தமிழ் இன மக்களுக்கு இலங்கைப் பாளிமெந்து ஜனநாயக அரசியலில் உள்ள பங்கு

எல்லா மக்களுக்குமான எல்லா மக்களாலுமாய, எல்லா மக்களுக்குமாக ஒரு அரசாங்கம் பிரித்தானிய அரசமைப்பின்படி பாளிமெந்து ஜனநாயகமாக இருக்கவேண்டும். இந்த அடிப் படையிலேதான் 1948 ஆம் ஆண்டு இலங்கைக்குச் சுதந்திரம் கொடுக்கப்பட்டது. ஆனல் கடந்த 21 ஆண்டுகளாக ஈழத் தமிழர்கள் அரசியல் தலீவிதி என்னுயிற்று என்பதை இதன்கீழ் விபரித்திருக்கும் இரண்டு அட்டவணைகளிலிருந்தும் ஊகித்து அறிந்துகொள்ளலாம்.

அட்டவணை : 1

அரசாங்க ஆட்சி மன்றத்தில் பிரதிநிதித்துவம்: கடைசி அரசாங்க சபையிலும் (ஸ்ரேற் கவுன்சில்) தொடர்ந்து இலங்கையின் ஆறு பாளிமெந்து சபைகளிலும் தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமனம் பெற்ற அங்கத்தவர் களின் வீதப்பங்கீடுகள். (முதலாவது அங்கத்தின் கீழ் உள்ள வீதப் பங்கீடு கொடுக்கவில்லை.)

	ஸ்ரேற் கவுன்சில் அரசாங்க சபை	பாளிமெந்து மக்கள் பிரதிநிதிகள் சபை				
		1வது	2வது	3வது	4வது	5வது
சிங்களவர்	66 —	64 —	73 —	75 —	78 —	78 — 79
ஈழம் தமிழர்	14 —	13 —	13 —	12 —	11 —	12 — 11
முஸ்லிம்கள்	6 —	6 —	7 —	8 —	7 —	9 — 8
இந்தியத் தமிழர்	5 —	7 —	1 —	0 —	1* —	0 — 1*
பறங்கியர்	3 —	3* —	3* —	2* —	2* —	1* — 1*
ஐரோப்பியர்	6 —	4* —	3* —	3* —	1* —	0 — 0

(முதலாம், இரண்டாம், மூன்றும் பாளிமெந்து சபைகளில் முறையே 101 அங்கத்தவர்கள் இருந்தனர். நாலாம், ஐந்தாம், ஆறும் பாளிமெந்து சபைகளில் 157 அங்கத்தவர்கள் இருந்தனர். புள்ளடி விபர இலக்கங்கள் நியமன அங்கத்தவர் களைக் குறிப்பனவாகும்.)

இவற்றிலிருந்து, இவ் விபரங்கள் 'ஐம்பதுக்கு—ஐம்பது', 'ஐம்பத்தைந்துக்கு—நாற்பத்தைந்து', 'அறுபதுக்கு—நாற்பது', கிட்டத்தட்ட 'என்பதுக்கு—இருபது' என்ற விகிதாசாரத்துக்கும் அண்மையில்கூட இல்லாமல் அப்பாற்பட்ட ஒரு கூச்சல் என்பதை நேரில் விளங்கிக்கொள்ள முடிகின்றது.

அட்டவணை : 2

இதுவரை ஏற்படுத்தப்பட்ட மந்திரி சபைகளில் இடம்பெற்றுள்ள ஆகக்குறைந்தளவு ஈழத்தமிழரின் தொகை :

அதாவது, இதுவரை காலமும் சுதந்திர இலங்கையின் ஆறு பொதுத் தேர்தல்களின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட எட்டு மந்திரி சபைகளிலும்—ஒரு இடைக்கால அரசாங்கத்தின்போது உண்டாக்கப்பெற்ற ஒரு இடைக்கால மந்திரிசபையிலும் — அங்கமாயிருந்த ஈழத்தமிழரின் எண்ணிக்கை விபரங்கள் வருமாறு :

	மந்திரிகள் மொத்தத் தொகை	அதில் ஈழத் தமிழரின் தொகை
1. டி. எஸ். சேனநாயக்காவின் மந்திரி சபை :	1948 — 14 க்கு	3
2. டட்லி சேனநாயக்காவின் மந்திரி சபை :	1952 — 14 கு	2
3. சேர் ஜோன் கொத்தலாவலையின் மந்திரி சபை :	1953 — 13 க்கு	2
4. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் மந்திரி சபை :	1956 — 15 க்கு	ஒருவருமில்லை
5. டபிள்யூ. தஹநாயக்காவின் இடைக்கால மந்திரி சபை :	1959 — 15 க்கு	ஒருவருமில்லை
6. டட்லி சேனநாயக்காவின் மந்திரி சபை :	1960, மார்ச்சி —	8 க்கு ஒருவருமில்லை
7. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் மந்திரி சபை :	1960, ஜூலை —	11 க்கு ஒருவருமில்லை
8. டட்லி சேனநாயக்காவின் மந்திரி சபை: 1965: ஆரம்பத்தில் —	17 க்கு	1
தற்போது – பின்னர் —	17 க்கு	ஒருவருமில்லை

அகில உலக மனித உரிமைகள் பிரகடனம் : கோட்பாடு 21 (1) கூறுவதாவது :

"ஒவ்வொருவரும் தனது நாட்டின் அரசாங்கத்தில் நேராகவோ அல்லது சுதந்திரமாகத் தெரிவு செய்யப்பெற்ற பிரதிநிதிகள் மூலமாகவோ பங்குபற்றும் உரிமையுடையவர்." இந்த அம்சம் மேற்படி மந்திரிசபை அமைப்பினுல் மீறப்பட்டுள்ளதை வெளிச்சமாகக் காட்டுகிறது. குறிப்பாக ஈழத் தமிழரைப் பொறுத்தமட்டில் நடைமுறையில் சிறிதளவேனும் எண்ணிக்கொள்ளாது 'கண்ணும்பூச்சி' காட்டப்பட்டிருப்பதைக் கண்டுகொள்க.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தமட்டில் ''அவர்களின், அவர்களால், அவர்களுக்கு என்றேர் அரசாங்கம் அமைய வில்லை'' என்னும் உண்மை துலாம்பரமாக அம்பலப்படுத் தப்பட்டிருக்கின்றது. மானம்போக்காமல் ''சந்தர்ப்பத்தைச் சமாளிக்கும்'' ஒரு கோப்பியமாகவேனும் அமைக்கப்பட் டிருக்கவேண்டும்.

பாளிமெந்து மூலம் அரசாட்சி செய்யும் ஜனநாயகமுறை ஈழத்தமிழர்களுக்கு ஒரு பெரும் ஈனமாகவே இருந்து வந்திருக் கின்றது, இந்தச் சுதந்திர இலங்கையில். இலங்கைக்குச் சுதந்திரம் பெற்றுக்கொடுக்கும் பெருமுயற்சியில் ஈழத் தமிழருக்கும் சராசரி பெரும் பங்குண்டு. ஆனல் பகிர்ந்து அனுபவிப்பதில் பரிகாசம்! நம்பிக்கைத்துரோகம்!! ஏமாற்றம்!!! இதுவா ஜனநாயகம்? இதற்காகவா இலங்கைக்கு அரசியல் சுதந்திரம்!?

மனப் புண்பாடு, — 10

ஈழத் தமிழ் இன மக்களின் பேச்சு, எழுத்து, கூட்டம், எண்ணம் கலை-கலாச்சாரச் சுதந்திரம்

1956 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவசரகால நிலைமை ஆண்டாண்டுதோறும் இருந்தபடியே இருக்கிறது. இது ஈழத் தமிழ் மக்களுக்குப் பாதகமாகவே யிருந்துவருகிறது. விசேடமாக 1958 இல் பத்திரிகைத் தாபனங்கள் யாவும் நாட்டின் நிலைமைபற்றிய உண்மைச் செய்திகளைப் பிரசுரிக்கும் உரிமைகளை இழந்தன. இதனால் மக்கள் தமது நேர்மையான எண்ணங்கள் கருத்துக்கள் அபிப்பிராயங்களைப் பத்திரிகைமூலம் வெளிப் படுத்தும் சுதந்திரத்தை இழந்தனர். அதுமட்டுமா ஒருவரோடொருவர் சுதந்திரமாகத் தமது கருத்தைப் பரிமாறவுங்கூடாது, அல்லது கண்டபடி தமது உள்ளக்கருத்தை வெளியிடவுங்கூடாது என எச்சரிக்கவும்பட்டனர். பத்திரிகைகளுக்கும், பொது மக்களுக்கும் வாய்ப்பூட்டுப் போடப்பட்டது என்று சொல்லலாம்.

ஒருவேளை ஒரு சிங்களப் பத்திரிகை—அதிகமான பிரதிகள் விற்பனையாகும் பெரியதோர் செய்தி ஸ்தாபனம் — " அவசரகால நிலைமை 1958 " என்னும் நூலின் ஆசிரியர் தார்ஸிவித்தாச்சி என்பார், நேரடியாக கலகம் சதித்திட்டத்திற் பங்குபற்றியவர்களிடமிருந்து பெற்ற உண்மையான செய்திகள் திட்டங்களைக் குறிப்பிட்டு " பதவியாப் படுபாவிகள் " என்ற தலைப்பில் ஒரு செய்தியைப் பிரசுரித்தது. இந்த விபரங்கள் வெளிவந்த செய்தித் தாளின் பக்கங்கள் அரசாங்கத்தின் உத்தரவுப்படி உடனே அந்தப் பத்திரிகையிலிருந்து அகற்றப்பட்டன. ஆனாலும் நடந்தது என்ன? திரு. சுந்தரலிங்கம் இந்த விபரங்களைப் பாளிமெந்தில் சிங்களத்தில் அப்படியே சமர்ப்பித்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வாசித்துவிட்டார். இவற்றை நீங்கள் ஹன்சாட் புத்தகத்திலிருந்து படித்தறியலாம்.

தமிழ்ப் பிரதேசத்தில், தங்கள் சொந்த வீட்டில், நாட்டில் ஈழத் தமிழ் மக்கள் பயமில்லாத பரிபூரண சுதந்திரத்தை அனுபவிக்கமுடியாத பரிதாபநிலையில் இருக்கிறார்கள்.

[ஜனப் பிரதிநிதிகள் சபை : ஹன்சாட் புத்தகம் இல. 34 கொலம் 226 — தொடர்ந்து கொலம் 324 — இரண்டும் திகதி 20 ஜனவரி, 1959.]

தமிழ்ப் படங்களை இலங்கையுள் இறக்குமதி செய்வதில் கட்டுப்பாடு விதித்ததின்மூலம் தமிழ் கலாச்சாரம் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டுள்ளது மட்டுமன்றி அதன் சீர்சிறப்பும் அலுக்குலைந்துவிட்டது. பிரதிகள் அச்சிடக்கூடிய சினிமாப்படச் சுருள்களைத் தடைசெய்ததினால் சினிமாப்படங்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டது. ஒரே நேரத்தில் ஒருமுறைமட்டும் மூன்று சினிமாக்களில் மூன்று பிரதிகளைக் காட்டுவதே உள் நோக்கம். பிரதமர் டட்லி சேனநாயக்காவின் பௌத்த சிங்கள அரசாங்கம் வேணுமென்று கடைப்பிடிக்கும் இச் செய்கையின் அடிப்படை நோக்கம் தமிழ் சினிமாப்படங்களின் செலவில் சிங்கள சினிமாப்படங்களை விளம்பரம் செய்வதற்கும் அதன்மூலம் சிங்கள சினிமா முதலாளிமார் அதிக பொருளீட்டுவதற்கும் தமிழ் கலை, கலாச்சாரம் என்பன அபிவிருத்தியடையாவண்ணம் தடைப்படுத்துவதற்கும் சீரழிப்பதற்கும் ஆகும். வடமாகாணத்தின் தெற்கெல்லையோரம் உள்ள பல இடங்களில் சிங்களக் காடையர்கள் மிகவும் கெட்டித்தனமாகவும், கொடுமையாகவும் தமிழ் சினிமாப் படங்கள் காட்டுவதைத் தடைசெய்தே விட்டார்கள்.

இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள்வரை இலங்கை வானொலி நிலையத்தில் தமிழ் காலை நிகழ்ச்சிகள் தமிழ் தேவாரபாராயணங்களுடன் அல்லது பக்திப்பாடல்களுடன் ஆரம்பிக்கப்பட்டன. இபோது தமிழ் நிகழ்ச்சிகள் ''பௌத்த ஜயமங்கள சுத்தாஸ்'' கீர்த்தனங்களுடன் ஆரம்பிக்கப்படுகின்றன.

ஹிந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க, கிறீஸ்தவ பக்திப் பாடல்களும் இதேவிதம் ஆரம்பமாகி பௌத்த சிங்கள மயத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இலங்கை வானொலி நிலையம் வடபகுதியில் பரந்தனில் ஒரு கிளை ஸ்தாபன நிலையத்தைத் தோற்றுவிக்கத் திட்டமிட்டது. வடபகுதியிலேற்படவிருக்கும் உப வானொலி நிலையம் நிகழ்ச்சிகளை நல்ல துலாம்பரமாகப் பிழைகளின்றிக் கேட்டனுபவிக்க வழிகோலுவதாயிருக்கும். இதற்கென ஒரு இடத்தைத் தெரிந்தெடுத்து காடு துப்புரவாக்கி, பந்தல்கள் போட்டு, பூமாலை கும்பம் சோடனை செய்து, தேங்காய் உடைத்து, தமிழ்ப் பண்பாட்டின்படி ஞாபகார்த்த அத்திபாரக்கல் திரை நீக்கம் செய்யப்பட்டு, திறப்பு விழாவையும் செய்து முடித்துவிட்டனர். பாராட்டுப் பிரசங்கங்கள் வானைப் பிளந்தன. வாழ்த்துரைகள்

பல வாரி வீசப்பட்டன. முக்கிய பிரமுகர்கள் யாவரும் அவ்விடம் விட்டகன்றனர். திரைநீக்கம் செய்யப்பட்ட ஞாபகார்த்த அத்திபாரக்கல்லு - இரண்டாம் முறையாக, வெட்டுக் கட்டைக் காடு வளர்ந்து மூடப்பெற்று, சிறு காடாகக் காட்சியளிக்கிறது.

மிரட்டல்கள், பலாத்காரமூலம் தமிழ் கலை, கலாச்சார அபிவிருத்திக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

1956ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்துவந்தது போல, நடந்து அனுபவித்துவந்த மாதிரி, தங்களுடைய சொந்தத் தாய்நாடான ஈழம் தமிழ் பிரதேசத்தில், தங்கள் சொந்த வீட்டில், ஈழத்தமிழ் மக்கள் பயமில்லாத பரிபூரண சுதந்திரத்தை அனுபவிக்க முடியாத பரிதாப நிலையில் இருக்கிறார்கள்.

மனப் புண்பாடு, — 11

ஈழத் தமிழ் இன மக்களுக்கு பயம் பீதியற்ற வாழ்வு

1956 ஆம் ஆண்டு தொடக்கம் ஆனையிறவுக்குத் தெற்கே இலங்கையின் சகல பகுதிகளிலும் வாழும் ஈழம் தமிழர்கள் பயத்திலும் பீதியிலும் இருக்கவேண்டி வந்துள்ளது. பாளிமெந்து சபையில் ''சிங்களம் மட்டும்'' உத்தியோகமொழி மசோதா சமர்ப்பிக்கப்பட்டு, கொழும்பு, மட்டக்களப்பு மாவட்டங்களில் கொடூரமான இனக் கலவரங்களும் கொந்தளிப்பானதோர் நிலைமையும் ஏற்பட்டன. புறக்கோட்டைப் பகுதியிலுள்ள கடைகள் கிட்டங்கிகள் பல பொலிஸார் முன்னிலையில் பகற் கொள்ளையடிக்கப்பட்டன.

கல்ஓயாப் பகுதியில் உள்ள அதி உயர்ந்த அரசாங்க உத்தியோகத்தர் முதல், ஆகக் குறைந்த பதவியில் உள்ள ஊழியர்கள் வரை, வியாபாரிகளும் ஏனைய தமிழ் மக்களும் அங்குள்ளவோர் அரசாங்கக் கட்டிடமொன்றிற் புகுந்து தம துயிரைக் காப்பாற்றவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அந்த வேளையில் உரிய நேரத்தில் உறுதியுள்ளம் படைத்த ஈழம் தமிழ் பொலிஸ் மேலதிகாரி ஒருவர் எடுத்த விவேக நடவடிக்கையினாலேயே நிலைமை காப்பாற்றப்பட்டது. இரண்டு சிங்களக் காடையர் கூட்டத் தலைவர்களை இவர் சுட்டு வீழ்த்தினார்.

அன்றைய கல்ஓயாப் பள்ளத்தாக்கு அபிவிருத்தி அதிபரும் பின்னர் இலங்கையின் பிரித்தானிய ஐக்கிய இராச்சியம் இராசாங்க உதவித் தூதுவருமான கே. கனகசுந்தரம் அவருடன் கூட இன்னும் 300 ஈழம் தமிழ் மக்களும் இப்படியாகவே தங்கள் பாதுகாப்பைத் தேடிக்கொண்டனர். இந்தக் கல்ஓயாக் கலவரத்தின்போது எங்கும் ஏற்பட்ட மொத்த மரணங்கள் மதிப்பீட்டின்படி 300 க்கும் அதிகமானது என்பது அறிக்கை வெளியீடு. இவர்களில் அதிகமானோர் சிங்களர். அடுத்தபடி ஈழம் தமிழரும் முஸ்லிம்களுமாவர். இந்தக் கலகம் உண்மையாக இனத்துவேஷ அடிப்படையில் உற்பத்தியான கலகமாகும். இந்தக் கலகத்தின் உள்ளீடுகளை ஆராய பின்னர் ஒரு கமிஷன், அன்று பிரித்தானிய ஐக்கிய இராச்சியத்தின் இலங்கை இராச தந்திரியாகக் கடமையாற்றிய, சேர் லலிதா இராஜபக்ஸ என்பவர் தலைமையில் நியமிக்கப்பட்டது. கமிஷன் சில நாட்களாக விசாரணை நடத்தியது. பின்னர் எதுவித விபரங்களுமின்றி கவர்னர் ஜெனரலுக்கு, கமிஷன், றிப்போட் இல்லாமல் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது. இதனுடைய காரணம்பற்றி சேர் லலிதா

வீடம் திரு. எஸ். சுந்தரலிங்கம் விசாரித்தபோது பின்வருமாறு அமைந்த சாரப்படி அவர் காரணம் கூறியுள்ளார்: ''இதன் உண்மைகள் யாவற்றையும் எடுத்துக்கூறுவதாலும் தாங்கமுடியாத பயங்கர நிலைமை உண்டாகிகல்ஓயாப் பள்ளத்தாக்கில் மட்டுமல்ல அதற்கு அப்பாலும், சுற்றுமுற்று மெங்குமுள்ள வீடுகள் நிலையங்கள் ஒன்றுமின்றி யாவும் அழித்தொழிக்கப்பட்டு நிர்மூல மாக்கப்பட்டுவிடக் கூடியதான பயங்கர நிலைமையுண்டாகும்; பொலிஸ் பட்டாளங்களுக்கும் சமாளிக்கமுடியாதபடி சட்ட ஒழுங்கு முறைகளுக்குப் பங்கமுண்டாகிப் பாழாக்கப்படும்'' என்ற சாரப்படி பதிலளித்தார்.

1958 ஆம் ஆண்டு முற்பகுதியில் சிங்கள ஸ்ரீ எதிர்ப்பு இயக்கமும்; சிங்கள ஸ்ரீ எதிர்ப்பு இயக்கத்திற்கு எதிர் இயக்கமும் இலங்கை எங்கு முண்டாயின. ஏறக்குறைய 275 சிங்கள அரசாங்கத் தொழிலாளரைக் கொண்ட காடையர் கோஷ்டி. யொன்று வவுனியாத் தொகுதியிலுள்ள செட்டிகுளம் கிராமத்தை அழித்தொழிக்க அணிவகுத்து வந்துவிட்டது. இக்கிராமம், கத்தோலிக்கர், இந்துக்கள், முஸ்லிம்கள் ஆகியோரைக் குடிபதி களாகக் கொண்ட ஒரு தனித் தமிழ்க் கிராமம் ஆகும்.

அதிருஷ்டவசமாக அங்கு தக்க தருணத்தில் திரு. சுந்தர லிங்கம் அவர்கள் சென்று அந்தக் காடையர் கூட்டத்தை உயிர்ப் பிச்சை கேட்டு ஓட்டம் பிடிக்கச் செய்தார். இந்தச் செயலில் ஆறு பேர் சூடுபட்டிறந்தனர். அதிகமானோர் அபாயகரமாகக் காயப் பட்டு நோவுண்டனர். இச்சாதனையை நிலைநாட்டத் துவக்குத் தாங்கிய ஈழத் தமிழர் மூவரையும் விரைவாகத் தோட்டா எடுத்துக் கொடுக்க ஒருவரையுமாக அவர் கையாள்படுத்தி காட்டுப் போர் உபாயத்திலும் வெற்றி வீரச் சாதனையை நிலைநாட்டினார்.

இதைத் தொடர்ந்து 1958 மே—ஜூன் மாசத்தில் நிகழ்ந்த கொடூரமான கொடிய இனக் கலவரக் குழப்பம்பற்றி எண்ணு வோம். ஈழத் தமிழரை உயிருடன் தீ வைத்து எரித்துச் சித்திரவதை செய்தனர். தமிழ்ப் பெண்களை வர்ணிக்க முடி யாத வகையிற் கற்பழித்துத் துன்புறுத்தினர். ஈழத் தமிழரின் ஒரு ஆலயம் அசுத்தப்படுத்தப்பட்டு அடித்து நொருக்கி அழிக் கப்பட்டது. இவை யாவும் சிங்களத் தென்னிலங்கையில் நடந்தன. இதன் எதிரொலி வட இலங்கையில் தமிழ் ஈழத்திலும் கேட்டது. ஒரு புத்த விக்கிரகம் சின்னபின்னப்படுத்தப்பட்டு கடலில் வீசப் பட்டது. இந்த விக்கிரகம் பர்மா அரசாங்கத்தினதும் பர்மா மக்களதும் சார்பில் இலங்கைப் பௌத்தர்களுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் வெகுமதி செய்த விக்கிரகமாகும். 1956—1957 ஆம் ஆண்டின் புத்த ஜயந்தி அன்பளிப்பாகச் செய்யப் பட்ட புத்த சிலையாகும்.

1958 ஆம் ஆண்டு இலங்கையெங்கும் இனக் கலவரத்தினால் ஏற்பட்ட கொலைகள் புள்ளிவிபரப்படி பாலிமெந்தில் எடுத்துக் கூறியவாறு ஏறக்குறைய 2000 என்று மதிப்பிடப்பட்டது.

1959 ஆம் ஆண்டு பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டார நாயக்கா படுகொலையுண்டபோது அவரைக் கொலை செய்தவர் ஒரு இலங்கைத் தமிழராக இருக்கவேண்டும் என்றோர் பொய் வதந்தியும் உண்டாக்கப்பட்டுக் காட்டுத் தீயென எங்கும் பரவ லாயிற்று. உடனே கொழும்பிலிருந்து சில தமிழ்க் குடும்பங்கள் தத்தம் உடைமைகளையெல்லாம் விட்டு வடபகுதியிலுள்ள தமது வீடுகளுக்குத் தமதுயிரைப் பாதுகாக்க ஓடிப்போகவேண்டிய அவல நிலை உண்டானது.

1960ஆம் ஆண்டில் ஈஸ்டர் விடுமுறையைக் கழித்து யாழ்ப் பாணத்திலிருந்து கொழும்பு சென்றுகொண்டிருந்த ஒரு புகை யிரதம் ஈழம் தமிழ் உத்தியோகத்தரையும் மற்றும் தமிழ் மக்க ளையும் கொண்டுசென்றது. இப் புகையிரதத்திற்குத் திட்டமிடப் பட்ட சிங்களச் சதிகாரரினால் பாதைவிலக்கிச் சேதம் ஏற்படுத்தப் பட்டது. அதிருஷ்டவசமாக 2 பேர் மட்டுமே இதில் உயிர் இழந்தனர்.

1961–62ஆம் ஆண்டுகளில் சமஷ்டிக்கட்சியாரின் சத்தியாக்கிரக இயக்க முயற்சியைத் தொடர்ந்து ஈழம் தமிழ்ப் பிரதேசத்தை நிர் வாக ஆட்சி செலுத்தச் சிங்களப் பட்டாள முகாம்கள் நிலை நிறுத் தப்பட்டன. உதாரணம்: பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, தாளையடி முதலாய இடங்களில். இதனாலும் இடையிடையே சூடுகளும் கொலைகளும் ஆங்காங்கே நடைபெற்று வந்தன.

மிகவும் அண்மையில், சிங்கள போர்வீரர்கள் தமது பட் டாளத்துக்குரிய 'சிவ்வி'யுடை அணிந்தவர்களாய் மேலுத்தரவு களையும் மீறி மன்னாரில் கட்டுக்கடங்காத மாதிரி அட்டகாசம் புரிந்துவிட்டார்கள். இதனால் ஒரு தமிழ்க் கிராமத்தையே கலக்கித் துன்புறுத்தினார்கள். தமிழ் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் முழங்காலுக்குக் கீழ் துவக்குச் சூடு செய்து அவர்களை ஓட்டம் பிடிக்கச் செய்தார்.

இங்கே பட்டாள முகாம்கள் வைத்திருப்பதன் முழுநோக்க மும் வடபகுதிக் கரையோரங்களின் மூலம் இலங்கைக்கு வரும் அடாத்துக் குடியேற்றக்காரரைத் தடுப்பதற்கும் கள்ளக் கடத்தல் களை நிற்பாட்டுவதற்குமாகவேயன்றி வேறல்ல என்று நொண்டிச் சாக்குப்போக்குச் சொல்லிக்கொண்டு காலங் கடத்துகின்றனர்.

குறிப்பாகச் சொல்லுமிடத்தில் 1958ஆம் ஆண்டு நடந்த கலவரத்தின்போது ஒரு சந்தர்ப்பத்தில் சிங்களக் காடையர்கள் கட்டுக்கடங்காமல் கலகம் விளைத்துக் காடைத்தனத்தின் உச்ச

நிலைக்கு வந்தபோதும் ''சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டு முகமாக துப்பாக்கி றைபிள்களைக் காட்டிப் பயமுறுத்துவதே யன்றிச் சுட்டுவிடக்கூடாது'' என்ற மேலிடத்து ஆணையில் தாம் செயலாற்றுவதாகத் தெரிவித்திருந்தார்.

ஈழம் தமிழர் எல்லோரும் என்றும் ஞாபகத்திலிருத்தவேண்டிய இன்னுமோர் இரத்தங்குமுறும் சம்பவம்:

இன்று பதவியா என்றும் அன்று பதவியில் குளம் என்றும் கூறப்படுவதான குடியேற்றத்தில் இருந்து 600 சிங்களக் கொலனிக் குடியேற்றக்காரரின் அணிவகுப்புக் கோஷ்டியொன்று லொறிகள், ஈயுக்கிலிட் என்னும் பெரும் காடு அழிக்கும் யந்திரங்கள், ஒரு 'பௌசர்' தாங்கி—நிரம்பிய பெற்ரோலுடன் வவுனியாப் பட்டணத்தில் பிரவேசித்தனர். நம்பகரமான செய்திப்பிரகாரம், அவர்களின் அந்தரங்க திட்டப்படி வவுனியாப் பட்டணத்தை முதலில் அழித்தொழித்தலாகும். அதன்பின் கிளிநொச்சிப்பட்டணத்தையும் தகர்த்து நொருக்கிவிட்டு, பின்னர், அங்கிருந்து பாதை வரிசையிலுள்ள பட்டினங்கள் கிராமங்களைத் தாக்கி யாழ்ப்பாணப் பட்டணத்தையடைந்து அனைத்தையும் நிர்மூலம் செய்வதாகும். அதன்பின்னர், ஊர்காவற்றுறையை ஒழித்துக் கட்டிவிட்டு, அங்கிருந்து சென்று பருத்தித்துறைக்குப் போகும் மார்க்கமுள்ள பட்டினங்கள் கிராமங்களையும் பரிநாசம் செய்து திரும்புவதாகும். ஆனால் ஐயகோ—அவர்களின் திட்டம் எல்லாம் புஷ்வாணமாக்கப்பட்டதும் வவுனியாப் பட்டணத்திலேயே யாகும் என்பதை வர்ணிக்கத்தான் முடியவில்லையே!

நடந்தது என்ன தெரியுமா? ''வவுனியாப் பட்டணம் வந்தும் வழியில் 'சுந்தரலிங்கத்தாரின் கொறில்லாக் காட்டுப் போர்' வீரரால் தாக்கப்பட்டு அனைவரும் மாழவேண்டி நேரிடும்'' என்னும் செய்தியை இடைவழியில் கேட்டு அஞ்சிப்பயந்து மீண்டுவிட்டனர் அக் கலம்பகக் கோஷ்டியார்! ஆனால் ''ஒருயிருக்கேனும் உடைமைக்கேனும் ஒருவித நாசமோ சேதமோ ஏற்படாது நிலைமையை வெகு சாதுரியமாகப் பாதுகாத்து வீரசாதனையை நிலைநாட்டினவர் ஸ்ரீ. சுந்தரலிங்கம்'' என்று எல்லோரும் ஏகோபித்துப் பாராட்டி மகிழ்ந்து ஆறுதலடைந்தனர்.

தென்னிலங்கையில் குறிப்பாக உள்ளூர்ப்புறங்களில் தமது சீவியத்திற்காகப் பல்வேறு வேலைகளில் ஈடுபட்டிருக்கும் ஈழத் தமிழர்கள் இன்றும் எந்தநேரத்திலும் தமது உயிர் உடைமைக்கு ஆபத்து வரக்கூடுமோவென்ற அச்சத்தோடும், உடனடியாகத் தமது பொருள் பண்ட உடைமைகளைப் போட்டுவிட்டு உயிருக்காகத் தப்பி ஊருக்கு ஓடவேண்டும் என்ற ஆயத்தத்தோடும் பீதியோடும்தான் சீவித்து வருகின்றார்கள். இந் நிலைமை பற்றி இலங்கை அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதுபற்றி எவ்வித அக்கறையேனும் உண்டா?!

மனப் புண்பாடு, — 12

ஈழம் தமிழ் இனத்தின் வழிபாட்டுச் சுதந்திரம்

(அ) ஈழத் தமிழ் இனமே! எங்கே உன் வழிபாட்டுச் சுதந்திரம்? பக்தியாத்திரைச் சைவத் தலங்களும் பரிசுத்த நகரங்களும் என்னுய்விட்டன?

அரசாங்க உத்தியோகத்தரில் பொறுப்புவாய்ந்த மேலதிகாரி களாயுள்ள பலரினது செயல்களால் பாரம்பரிய பழைமைகளின் இருப்பிடங்களாகிய பல ஆலயங்கள், முக்கியமாகப் பண்டித் தலைச்சி அம்மன் கோயில், வல்லிபுரம் விஷ்ணு ஆழ்வார் ஆலயம் உட்பட வருடாந்த மகோற்சவங்களைத் தொன்றுதொட்டுப் பல தலைமுறைகளாக ஊர்வழமை, ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகிய நடைமுறைப்படி செய்துவந்தமாதிரி திருவிழாக்கள் செய்யப் படத் தடைகள் பல; வசதியீனங்கள் பல உண்டுபடுத்தப்பட் டுள்ளன.

பல சைவ ஆலயங்களைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான சைவ பக்தர்கள் இதனால் உள்ளத்தில் வேதனை அடைந்துள்ளனர். மாவிட்டபுரம் முருகனின் திருக்கருணையால் 1968—1969 ஆம் ஆண்டுகளில் நடந்தேறிய உற்சவங்களில் பெருமளவு உயிர்க் கொலைகளும் பாரியமான இரத்தக்களரியும் ஏற்பட்டிருக்காதபடி நடந்தொப்பேறிவிட்டன. இதை எழுதுகிறதாகிய இந்தவேளை யிலும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் பழைய முறைப்படி நித்திய நைமித்தியங்கள் மகோற்சவங்கள் நடைபெறுவதற்கு இடைஞ்சல்கள் ஏற்பட்டவண்ணமேயிருக்கின்றன.

> ''எண்ணம், மனச்சாட்சி, மதம் என்பவற்றில் சுதந்திர மனுபவிக்க ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு..... தன் னுடைய மதத்தைப் பயில அல்லது கோட்பாட்டைப் பிரதி பலிக்க; அதாவது—பயிற்சி, நடைமுறை, வணக்கம், அனுட் டானம், சாதனை, போதனை, ஒழுங்கு என்பவற்றில் அவரவர்க் கென்றேர் நம்பிக்கை வைத்து நடந்துகொள்ளும் உரிமை இச் சுதந்திரத்தின் உள்ளடக்கம் ஆகும்''.

1957ஆம் ஆண்டின் சமூகக் குறைபாடுகள் சட்டம் மேற்படி ''குறிப்பிட்ட உரிமையைப்'' பாரதூரமாகப் பாதிக்குமளவுக்குச் செயற்படும்போது பலாத்காரத்தின்மூலம் வணக்கத்திற்கு இடை யூறு செய்யவும், தொன்றுதொட்டு வந்த சமய வழக்கங்களை மாற்றியமைக்கவும் முடியுமெனக் கருதப்படுமானால், அந்த

நிலைமையானது, மனித உரிமைகள் பற்றிய அகில உலக சாசனத்தின் 18 ஆம் அம்சத்தை மீறுவதாகும்.

கதிர்காமத்தில் அரசியல் பிக்கு ஒருவர், புத்தர் 'சமாதி'யடைய முன்கொண்டிருந்த ''சித்தார்த்தர்'' என்ற புனித பெயரையுடையவராய், பலாத்காரத்தைப் பிரயோகித்து, கதிர்காமம் மலையுச்சியில் உள்ள கந்தன் கோவில் திறப்புகளையும் பறிமுதல் செய்து கோவிலையுமே கைப்பற்றிக்கொண்டுவிட்டார்.

ஈழத் தமிழினம் தனது ஆலயங்களைப் பறிகொடுப்பதோடு ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிபாடு செய்யும் தெய்வங்களையும் இழக்கும் தறுவாயிலுள்ளது. எவ்வளவு காலத்திற்கு இந்த ஈனமான நிலையில் குட்டக் குட்டக் குனிந்து வாழ்வது? எத்தனை நாட்களுக்கு இந்த அநீதிகளுக்கு ஆளாவது? சிங்களரின் பெரும்பான்மை ஆதிக்கத்திலுள்ள அரசாங்கம் தற்போது மந்திரி பிரேமதாசாவின் நிர்வாகத்தின்கீழ் சைவமக்களுக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் புனித சைவத்தின் சின்னமாகப் பொலிந்தது! செல்லக்கதிர்காமம் எவ்வாறு சீர்கெடுக்கப்பட்டுள்ளது அதேபோல, அரசியல் அகங்கார பௌத்த பிக்குகளின் ஆக்கிரமிப்பினால் நமது சைவாலயங்களின் அநாதியான சொத்துக்கள் சுதந்திரங்கள் யாவும் அரசாங்க ஆதரவுடன் சூறையாடப்படுகின்றன. (மந்திரி பிரேமதாசாவின் செல்லக் கதிர்காமச் சிதைப்புச் செயல் பற்றி இதே அத்தியாயம் (ஆ) பிரிவு 4ஆம் பகுதியில் மேலும் விபரம் பார்க்கவும்.)

ஈழத் தமிழ் இனம் தனது வணக்க சுதந்திரத்தைத் திருக்கோணமலை, கதிர்காமம், செல்லக்கதிர்காமம் போன்ற சைவ இடங்களில் இழந்துபோமாறு சிங்கள அரசாங்கத்தின் ஆதரவோடும் உள்ளூராட்சி அமைச்சின் அநுசரணையோடும் திட்டமிட்ட உதவியினால் செயற்படுத்தப்பட்டுவருகின்றது.

அரசியல் செல்வாக்குள்ள பௌத்த பிக்குமார், இனப்பாறிய அரசாங்க புதைபொருளாராய்ச்சித்துறை அதிபர் டாக்டர் கொடகும்புறே போன்ற பௌத்த சிங்கள அகங்காரிகளினால் உதவியும் உற்சாகமும் அளிக்கப்பட்டு வருகின்றன. இவர்களின் நோக்கம் முழுவதும் கோணேஸ்வரம் கோவிற் பிரதேசம் முழுவதையும் பரிசுத்த பிரதேசமாக்கித் தங்கள் செல்வாக்கை நித்தியமாய் புராதனமாக்கித் தமது கையில் வைத்துக்கொள்வதுதான்.

''திருக்கோணமலை எப்போதும் சிங்களம் என்றும்'', ''1948க்கு முன் அங்கே ஒரு இந்துக்கோவிலும் இருக்கவில்லை'' என்றும் பகிரங்கமாக அறைகூவல் செய்து உரிமையை நிலைநாட்டும்

முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் பொய்யான துவேஷமான ஆத்திரமூட்டும் ஆதிக்கம் நிரூபித்தல் முயற்சியைப் பத்திரிகையில் வெளியீடான நாலு பகிரங்கக் கடிதங்கள்மூலம், திரு. செ. சுந்தரலிங்கம் கண்டித்துள்ளார். அந்தக் கட்டுரைகளில் ஏதும் விபரத் தவறுகள் தப்பு அபிப்பிராயங்கள் இருப்பின் அவற்றைத் திருத்த வேண்டுமென்று நான் (இந்த நூல் ஆசிரியர் செ. சுந்தரலிங்கம்) பகிரங்கமாக விடுத்த சவாலை அவர் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. அவர் எதுவித பதிலும் எழுத முன்வரவில்லை. இதுவேதான் அவரது முடிபும் துணிபும் ஆகும்.

திருக்கோணமலையில் (ஏனைய இடங்களிலும் சரி) இந்துக்களின் அதாவது சைவப் பெருமக்களின் வழிபாட்டு உரிமைகளைக் கட்டுப்படுத்தும் முறைகள்பற்றியோ அல்லது ஏனைய இடங்களில் சைவப் பெருமக்களின் வழிபாடு விடயங்களை இடையூறு செய்யும் நோக்கத்துடனேயோ எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் பற்றிய நாட்டு நிலைமையை உண்மையாகப் பிரதம மந்திரி அறிந்திருக்கிறார். அரசியற் செல்வாக்குள்ள பௌத்த பிக்குகளின் நயவஞ்சகமான நஞ்சூடுருவிய செயல்முறைகளைப் பிரதமர் உள்ளும் புறமும் நன்கறிந்திருக்கிறார். பௌத்தமதப் பிரமுகர்— டாக்டர் கொடக்கும்புறவின் 'தொட்டிலும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளும்' செயல் முறைப்படி 'கோணேஸ்வரக் கோயிற் பிரதேசம் பௌத்த புனித பிரதேசம்' என்று பிரகடனம் செய்யப்படவேண்டு மென எண்ணுவதும் எத்தனிப்பதும் எத்துணைத் துரோகச் செயலாகும்;

"1622 இல் போர்த்துக்கீசர் கோணநாதர் கோவிலையும் அதன் 1000 கால் கருங்கல்லுத் தூண்களினாலாய மண்டபங்களையும் கோபுரங்களையும் வீதிகளையும் உடைத்தனர். அத்துடன் அதற்குரிய பாண்டியன் இரட்டை மீன் சின்னத்தையும் தீர்க்கதரிசனமான புராதன தமிழ் வாக்கியத்தையும் பிரித்து எடுத்து அவர்கள் கட்டிய பிரடெறிக் கோட்டை முகப்பிற் பதித்துவிட்டனர். இன்றுவரை திருகோணமலைப் புராதனச் சிறப்பையும் புராண மகிமையையும் எமக்கெடுத்துச் சொல்வதான இந்த வாக்கியங்கள் அண்மையில் கோட்டை வாசலிலிருந்து அழிக்கப்பட்டுவிட்டன அல்லது அகற்றப்பட்டுவிட்டன!

சரித்திரப் புகழ் பெற்ற தீர்க்கதரிசனமான தெளிவுச் சுருக்கமான பழந்தமிழ் வாக்கியங்களின் கதி என்னாயிற்று?

"முன்னே குளக்கோட்டன் மூட்டு திருப்பணியை
பின்னே பறங்கி பிரிக்கவே — ....
...."

'யாழ்ப்பாண வைபவமாலை'யின்படி என்னவென்றால்:

"..... .....
மானே வடுகாய் வரும்."

இதனால் அந்நிய வெள்ளையர் இலங்கையை விட்டு வெளியேறிய பின் கோணமாமலையும் அதன் அக்கம் பக்கம் இருக்கும் பிரதேசங்களும் ஈழம் தமிழ் இன மக்களின் அரசாங்கத்தில் அமையுமென்று உண்மை யுணர்ந்த சிலர் கருதுகின்றார்கள். அப்படியான அரிய பெரிய வாக்கியத்தை அழிக்க சிங்கள அகங்காரிகள் எத்தனிக்கிறார்கள்."

ஈழம் தமிழ் இனம் முன்னேற்றத்திற்கு வராமல் சிங்களரின் அடிமைகளும் கூலிகளுமாகச் சீவிக்கவேண்டுமென்ற நோக்கமே இம் முயற்சிகளின் அடிப்படையாகும்.

(ஆ) கதிர்காமம் யாருடைய தெய்வம்?

இலங்கை மத்திய அரசாங்கத்திற்கு (இந்து) சைவ மக்களின் வணக்க சுதந்திரம், உரிமை ஆகியவற்றுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகள் பற்றி எதுவும் தெரியாதா?

1. எவ்வாறு இந்து சைவசமய வணக்கத்திலுள்ளவர்களுக்கு பௌத்த சிங்களக் காடையர்களும் அகங்காரிகளான பிக்குகளும் பலாத்காரத்தை உபயோகித்து இன்னல்கள் விளைவித்துள்ளார்கள் என்பது பகிரங்க விஷயம்.

பல்லாயிரமாண்டுகளாக, ஞாபகத்திற்கு மப்பாற்பட்ட காலங்களாக, சைவத்தமிழர் குலதெய்வமான முருகன் — கதிரைமலை உச்சியில் வணங்கப்பெற்ற "கந்தகுமாரன்" இன்று சைவர்களுக்கு இல்லாத மூர்த்தி ஆக்கப்பட்டு விட்டான்.

2. கந்தகுமாரன் மகாதேவாலயத்துள் புத்த சிலையொன்றை வைக்கும் வணக்க தேவாலய கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்குப் 'புராணகிரி விகாரை' என்று சிங்களத்திற் பெயரிடப்பட்டிருப்பதும், 'பெருமாள் கோவில்' என்று தமிழில் கூறப்படுவதும் புத்தர்களையும் இந்துக்களையும் சைவர்களையும் ஏமாற்றுவதாகும். குறிப்பிட்ட கோவிலில் புத்தசிலையின் பின்புறத்தில் 'கந்தகுமார'னுக்கு ஒரு இருப்பிடம் வைக்கப்பெற்று வணக்கம் செய்வோருக்கு மயக்கமான விபரங்கள் சித்திரிக்கப்பட்டிருப்பதன் மர்மம் தெரியாதா?

3. கிரிபத் கொடுத்தல் (அதாவது பாலுந் தேனும் கலந்த பிரசாதம்) முதலில் புத்தசிலைமுன் படைத்தபின் அந்தப் பாத்திரத்தில் எஞ்சியதில் ஒரு பகுதியை கந்தகுமாரனுக்குப் படைத்து, பலநூற்றாண்டுகாலம் பழக்கத்திலுள்ள புராதன செய்கையை மறைத்து மூடி அவமதித்துள்ளமையையும் சரித்திர காலத்திற்கு அப்பாற்பட்ட 'கந்தகுமாரனையும்' சரித்திரப் பிரசித்தி பெற்ற புத்தரையும் அவமதிக்கும் கேலி நடைமுறைகளையும் மத்திய அரசாங்கம் அறிந்திருக்கவில்லையா?

4. செல்லக் கதிர்காமத்திற்குரிமையான ஆதனம்:

[உறுதிப் பதிவு இல. 2317; திகதி 9 மார்ச் 1898; நொத்தாரிஸ் ஜே. கதிரமன்]

தீர்த்தக்கரை ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோவில் முகப்பு நோக்கி யமைந்திருக்கும் மேட்டு (மலை) நிலம். கணேஷ மூர்த்தி இந்த இடத்திலிருந்தே கந்தகுமாரனுக்கு அசுரர்களை (தியவர்களை) எவ்வாறு வென்றெழிக்க வேண்டுமெனப் புத்தி புகட்டியதாகப் புனித புராணேதிகாச வரலாறும் மகான்கள் கதையுமுண்டு. இந்த மலைப்பூமியில் இப்போது கோட்டு உத்தரவையும் மீறிப் புத்த டாகபா ஒன்று கட்டப்பட்டுவிட்டது. காணி சுவீகரிப்புச் சட்டப்படி மந்திரி பிரேமதாச இந்த அதிகாரத்தைப் பிரயோகித்துள்ளார். கட்டிய டாகபாவை உடைத்திருக்கவேண்டும். அல்லது தக்க வேறு நடவடிக்கை எடுப்பதும் நல்ல ஒழுங்கு. கோவில் முகாமையாளருக்கும் டாகபா கோஷ்டியாருக்கும் இடையிலேற்படுத்தப்பட்ட இந்தப் பிரச்சினையைத் தீர்த்து விடவேண்டியது மந்திரியாரின் பொறுப்பு. டாகபாவை புத்த மக்களுக்குப் பொறுப்புக்கொடுத்ததின்மூலம் பிள்ளையார் கோவிலுக்கும் கோவில் முகாமையாளருக்கும் பெரும் அவமதிப்பை ஏற்படுத்தியுள்ளார் மந்திரி பிரேமதாச அவர்கள்.

(இ) கிறிஸ்தவ ஆலயங்கள், பள்ளிவாசல்கள், புனித சைவ தீர்த்தங்கள் என்பன தமிழ் ஈழத்தில் எப்படி அவமதிப்பாகக் கேவலப்படுத்தப்படுகின்றன?

1. புண்ணிய ஸ்தலங்களையும் தீர்த்தங்களையும் அசுத்தமாக்கும் தெய்வ நிந்தனையான செயல்கள் பற்றித் தெரியுமா? மன்னார் மாவட்டம் மடுரோட்டில் ஒரு அரசமரம் ஈழத்தமிழ் ரோமன் கத்தோலிக்க மக்களுக்கு மானக்கேட்டை உண்டுபண்ணும் வகையில் நாட்டப்பட்டுள்ளது. கன்னி மேரித்தாயார், பரிசுத்த மடுமாதாவை வணங்கும் கத்தோலிக்க மக்களின்

பக்தி மனம் கொதிப்படைந்துள்ளது. மடுமாதாவைத் தரிசிக்கச் செல்லும் யாத்திரிகர்கள் மோசமாக அவமானப் படுத்தப்படும் செய்கை இதுவல்லவா?

2. கிரிந்தை அடக்கம் என்பது முஸ்லிம்களுக்கு முக்கியமான யாத்திரை ஸ்தலம். கிரிந்தைப் பள்ளியில் தொழுகை நடாத்தப்போகும் முஸ்லிம் மக்கள் அந்த இடத்தின் புனிதத் தன்மை மாசுபடுத்தப்பட்டதைக் கண்டு மன வேதனை யடைந்துள்ளனர். இந்த அடக்கஸ்தலம் எங்கள் கதிர்காமத் திற்குத் தெற்கே சமுத்திரக் கரையோரத்தில் இருக்கின்றது.

3. மந்திரி பிரேமதாச அண்மையில் கீரிமலைக்கு உத்தியோக பூர்வமாக வந்து திறப்புவிழா வைபவத்திற் பங்கெடுத்தார். கீரிமலைக் கேணி புதுப்பண்ணப்பெற்றுக் கட்டப்பட்டதோடு தீர்த்தமாடுபவர்க்கு வசதியளிக்குமுகமாக ஒரு புதிய மண்டப மும் இங்கு கட்டப்பட்டுள்ளது. இதிலே சைவ மக்களின் மதாச்சார கிரியைகளும் நடாத்துவதற்கு வசதி செய்வதே நோக்கமாகும். இக் கேணிக்கரைக் கட்டடத்தின் திறப்பு விழாவின்போது அங்கு திரைநீக்கம் செய்த ஞாபகார்த்த சிலையில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் மொழிவரிசையில் எங்ஙனம் வைக்கப்பட வேண்டுமென்ற விடயத்தில் அவர் எப்படிப் பாரபட்சமாக நடந்துகொண்டாரென்பதை எவரு மறிவர்!

(ஈ) கீரிமலைப் புனித தீர்த்தம்— யாரும் வந்துபோகும் நோக்கம்?

கீரிமலை ஒரு மிகப் பழைய புனிதமான சைவக் கிராமம். இதற்குப் பெருமை பெற்றுத் தருவது இங்குள்ள பரிசுத்த தீர்த்தமாகும். சமுத்திரக் கரையோரமாக அமைந்துள்ள தீர்த்தக் கேணியுடன் சம்பந்தப்பட்டதோர் பிள்ளையார் கோவிலும் கொண்டதாய் இம் மண் சைவம் பொலிந்து விளங்குகின்றது. தேகாரோக்கியத்திற்கும், சமய ஆசாரங்களை அனுஷ்டிப்பதற்கு முகந்த சகல விசேடங்களும் தன்னிடத்தே பெற்றுள்ள இப் புராதன பூமியில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் தீர்த் தோற்சவ வைபவம் வருடா வருடம் ஆடி அமாவாசையன்று நடைபெறும். இங்குள்ள புனித புராதன 'நகுலேஸ்வரம் சிவன் கோவில்' திருவிழா ஒன்றும் இதே வேளையில் நடைபெறுவது வழக்கம். 'ஆடி அமாவாசைத் தீர்த்தம்' என்று சைவர்கள் எவராலும் தவறாமல் பங்குபற்றப்படும் இப் புனிதவிழா உற்சவத் திற்கு இலங்கையின் எல்லாப் பாகங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான சைவ பக்தர்கள், மற்றும்பலர் யாத்திரை செய்ப வர்கள் வந்து பங்கெடுத்துக்கொள்வர். ''ஆத்துமாக்கள் சாந்தி தினம்'' என்று கிறிஸ்தவர்களும் இதுபோன்றதோர் வருடாந்த

வைபவத்தைத் தங்கள் மத்தியில் அனுஷ்டிப்பர். சைவர்களுக்கு, ஆடி அமாவாசை, ஆன்ம ஈடேற்றமானதோர், பிதிர்களுக்குகந்த மகத்துவமான புனித புண்ணிய தினம்.''

தற்போது கீரிமலைத் தீர்த்தத்தின் இந்தப் புனிதத்தன்மை சீரழிக்கப்பட்டுள்ளது. மதுபோதை, மாமிசவாடை, கேளிக்கை விளையாட்டுக்கள், தென்னிலங்கையிலிருந்து வருபவரின் 'பயலா' பாட்டுக்கள் எல்லாம் இங்கு மலிந்துவிட்டன. அருள் மணம் பொலியவேண்டிய இப் புனித தலம் அசுச்சார இடமாக வந்துவிட்டதே!

இதுபோன்ற செயல்கள் இன்னும் பல : குறுகிய நோக்கங்கள் பல ; அரசாங்கத்தலையீடுகள் கவலையீனங்கள் எத்தனை ; கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். ''சிங்களயோஸ்''— பௌத்த அகங்காரிகள் தொடர்ந்து நடத்தும் அரசாங்கம், சிவம் பொலிவுடைய எமது இந்தத் தீர்த்தத்தின் மகத்துவத்தை உணர்ந்து மாசுபடாது காப்பாற்ற உடனே உகந்த நடவடிக்கை எடுப்பார்களா? சைவசமயத்தைப் பாதுகாக்கச் சங்கற்பம் செய்வது தலையாய கடமை.

மனப் புண்பாடு, — 13

ஈழம் தமிழ் இன மக்களின் பரம்பரைத் தாய்நாடு பறிமுதல் செய்யப்படுகின்றதே !

"சமஷ்டி அரசை நிறுவுவதாலே அது தங்கள் சொந்தத் தேசத்தைச் சின்னபின்னமாக்குவதாகும் எனச் சிங்களர் அஞ்சுகின்றனர் என்பதை அறியவேண்டும்" என்று பெருமளவில் விற்பனையாகும் ஒரு சிங்களப் பத்திரிகையின் ஆசிரியர் எழுதியிருக்கிறார்.

இன்றிருக்கும் நிலைமையில் இலங்கை முழுவதும் சிங்களரின் ஏகபோக இருப்பிடமல்ல; வரையறையான எழுத்துமூலங்களின் படி கிட்டத்தட்ட கி. மு. 1000 ஆண்டுகளாக, அதாவது, 2900 வருடங்களுக்குமதிகமான ஆண்டுகாலம் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட பிரதேசம் ஈழம் தமிழரதும், ஈழம் சோனகரதும் இருப்பிடமாய் இருந்தது. மகாவம்சத்தில் எழுதிவைத்தபடி "துர்நடத்தையுடைய" விஜயாவும், "அவனை யொத்த குண நடையுடைய" 700 கூட்டாளிகளும் இலங்கைக் கரையில் வந்திறங்கியது புத்தர் மரணமான திகதியிலாகும். அதாவது தத்தாகதவின் பரிநிர்வாண திகதியில் (கி. மு 543) இவர்கள் இலங்கைக்கு வந்தனர் என்கின்றதாகிய மகாவம்ச வரலாற்றின்படி ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, சிங்களர் இலங்கைக்கு அண்மையில் வந்தனர் என்பதையும், இடையில் வந்து நுழைந்துகொண்டவரே என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது. இதுவரை காலமும் இலங்கைத் தமிழரதும், இலங்கைச் சோனகரதும் தொன்மை வாய்ந்த இருப்பிட உரிமையை எவரும் ஏகபோகமாக ஆண்டனுபவிக்கவில்லை. அதாவது முழு இலங்கையும் இருமுறை சிங்கள அரசரின் கீழிருந்தபோதும் கவர்ந்து பறிக்கப்படவில்லை. முதலாம் பராக்கிரமபாகு இலங்கையைப் பதினாறு ஆண்டுகளும், ஆரும் பராக்கிரமபாகு ஆறு ஆண்டுகளும், தமிழ் அதிகாரிகளின்மூலம் தமிழ்ப் பகுதிகளை அரசாண்ட காலம் தவிர்ந்த ஏனைய காலத்தில், ஈழம் தமிழர்கள் தங்கள் சொந்த அரசாங்கத்தையும், ஆட்சியாளர்களையும் வைத்திருந்தனர்.

"இருசாதி இனங்கள் மிகப் பழைய காலந்தொட்டு இலங்கைத்தீவின் ஆட்சியைப் பகிர்ந்து அனுபவித்து வந்துள்ளன. சிங்களமக்கள் வளவை நதி தொடக்கம் சிலாபம் ஈறுக உள்ள தென்மேல் கரையோரங்களிலும் அடுத்துள்ள உள்நாட்டுப் பகுதிகளிலும் வசித்துவருகிறார்கள். மலபார் மக்கள் (அதாவது, ஈழம்

EVELYN RUTNAM INSTITUTE
152
REFERENCE
LIBRARY

தமிழ் பேசும் மக்கள்) ஏனைய வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் வசித்து வருகிறார்கள். இந்த இரண்டு இனங்களும் தங்கள் சமயம், பாஷை, பழக்கவழக்கங்களில் ஒன்றோடொன்று மிகவும் வித்தியாசமுடையனவாயிருக்கின்றன.'' குறிப்பாகக் கவனிக்கவும்: ''இலங்கைத்தீவின் ஆட்சியைப் பகிர்ந்து அனுபவித்து வந்துள்ளன'' என்று. இந்த அறிக்கையை 1799ஆம் ஆண்டில் எழுதியவர் ஹியூ கிளேக்ஹோர்ண் என்ற இலங்கையின் பிரித்தானிய குடியேற்ற நாட்டு முதற் காரியதரிசியாவர்.

பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனியின் நிலஅளவை மேவதி காரியாகக் கடமை புரிந்த அரோசிமித் என்பவர் உத்தியோக பூர்வமாக எல்லை நிர்ணயப்படமொன்றை 1803ஆம் ஆண்டு ஜனவரி முதற் திகதி இலண்டனில் வெளியிட்டுள்ளார். இதன் பிரகாரம் தமிழரின் தொன்றுதொட்டுவந்த 'பாரம்பரியமான நிலப்பிரதேசம்' எதுவென்பது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1802ஆம் ஆண்டில் பூர்த்தியான ஏமியன்ஸ் உடன்படிக்கையின்படி ''டச்சுக்காரரால் பிரித்தானியருக்குக் கையளிக்கப்பட்ட பாரம்பரிய ஈழம் தமிழ் பிரதேசம்'' இதுவேயாகும்.

இற்றைக்கு 2200 வருடங்களுக்கு முன்னர் கையினால் கீறப்பட்டு, அதொஸ் மலைப்படமென் றழைக்கப்பட்டதும், (Mount Athos Manuscript Map) — கிரேக்க எழுத்திலுள்ளதும், திருத்தி வரையப்பட்டதுமான மூலப்படத்தின்படியும், உள்ள எல்லை கிட்டத்தட்ட ஒற்றுமையுடையதாயுள்ளது. இந்த மலைப் படம் மகா அலெக்சாந்தரின் கட்டளைப்படி (கி. மு. 327—326) ஆண்டில் ஒனெசிக்கிறிட்டோஸ் என்னும் கிரேக்க நாட்டுக் கப்பலோட்டியினால் இலங்கைத் தீவைச் சுற்றிவந்து தயாரிக்கப்பட்ட படமாகும்.

''அரோசிமித் படமும், அதொஸ்மலைப்படமும், ஈழம் தமிழ் மக்களின் பிரதேசம்'' எதுவென்பதைச் சுட்டிக் காட்டுவதில் ஒத்த அம்சங்களை உடையனவாகவிருக்கின்றன.

ஈழத் தமிழ் இன அரசு இயக்கம் கொண்டுள்ள நோக்கமென்ன? தற்போதைய நிலையில் பாரம்பரியமான ஈழம் தமிழ்ப் பிரதேசத்தை ''உறுதியும் படமும் கூறும் ஆதாரப்படி'' ஈழம் தமிழ் மக்கள் மீண்டும் தமதாக்கிக்கொள்ளவேண்டுமென்பதே.

ஈழத் தமிழ்ப்பகுதியிலுள்ள எல்லா ஆசனங்களுக்கும் போட்டி போடாவிட்டாலும் அநேகமான ஆசனங்களை எதிர்வரும் பாளிமென்றத் தேர்தலில் ஈழம் தமிழ் ஒற்றுமை முன்னணி போட்டியிடவிருக்கின்றது.

இந்தவகையில் செய்துகொண்ட ஒழுங்குமுறை சிங்களரின் இருப்பிடத்தைச் சின்னபின்னப்படுத்தவில்லை. ''ஈழம் தமிழ் மக்களுக்குரிய குடிநிலத்தை மீட்டும் ஒன்று சேர்த்தல்'' என்பதே அதன் அர்த்தமாகும்.

கி. பி. 1832—33 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தங்கள் வசதிக் காகப் பிரித்தானிய ஆட்சியாளர், இலங்கையில் ஈழம் தமிழ் இன மக்களை எண்ணுக்கணக்கில் பெரும்பான்மையான சிங்களரினால் அடக்கியாளப்படும் நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டனர். அதன்பின் இலங்கை முழுவதும் ஏகோபித்த ஒரே ஆட்சி நிர்வாக மாகவும் ஆங்கிலம் உத்தியோக மொழியாகவும் இருந்துவந்தது. பிரித்தானிய ஆட்சியாளர் இழைத்த இந்த அநீதியை ஈழம் தமிழ் இன தேசிய வீரர்கள் இல்லாமலாக்கவேண்டும். ஈழம் தமிழ் இனத்தவர்களுக்குரிய குடிநிலத்தை மீண்டும் உருவாக்கும் செய்கை கண்டு சிங்களர் பயமும் பீதியும் அடைவதாலல் அவர்கள் தங்களையும் தாங்கள் தெரிந்தெடுத்த தலைவர்களையும் தான் வாழ்த்தவேண்டும். இலங்கையைத் தாய்நாடாகக்கொண்ட சகல மக்களதும் ஒத்துழைப்பினால் ஒன்றுசேர்ந்து பெற்றுக் கொண்ட சுதந்திரத்தை சிங்களரின் சீர்கெட்ட நடையினால் பிரிக்க வேண்டி வந்துள்ளது என்பதை அவர்கள் மனதில் உறுதியாக வைத்துக் கொள்ளவேண்டும்.

முதன்முதலாக இலங்கை அரசினைப் பொறுப்பேற்று மந்திரி சபையை அமைக்கும்படி அழைக்கப்பட்ட சமயம், தலதா மாளிகையில் வணங்கிய பின்னர் ''எல்லா மக்களுடையவும் அர சாங்கம், எல்லா மக்களினாலும் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கம், எல்லா மக்களுக்காகவும் உண்டாய அரசாங்கம்'' என்று பிரதம மந்திரி டி. எஸ். சேனநாயக்கா சங்கநாதம் செய்தார். இந்த நாதம் ஒலித்து இப்போது இருபது ஆண்டுகள் கழிந்துவிட்டன. டி. எஸ். சேனநாயக்கா இறந்தபின்னர் சிங்களரினால் ஆளப்படும் அரசாங்கத்தினால் அல்லது தனிச் சிங்கள அரசாங்கத்தினால் ஈழம் தமிழ் இனத்திற்கு இலங்கை அரசியலில் என்ன பங்கு? என்ன நன்மை? என்ன உரிமை? தற்போது இருக்கிறது.

சரித்திர முறையாகவோ, நீதிமுறையாகவோ மனச்சாட்சி முறையாகவோ சிங்களருக்கு இலங்கை முழுநாடும் தங்கள் தாய் நாடு என்று கூற ஒருவித உரிமையும் இல்லை. ஈழத் தமிழரின் தாய் நாடு ஆகிய பிரதேசங்களை தற்சமயம் தங்கள் தாய்நாடு என்று சிங்களர் கூறினால் என்ன பெரிய மனப் புண்பாடு! இது பெரும் அநியாயம் அல்லவா? கேட்க மனம் கொதிக்கின்றதே!

மனப் புண்பாடு, — 14

ஈழம் தமிழ் இன மக்களின் மரணப்பதிவு

பௌத்த சிங்கள அதிகார அகங்காரிகளின் அரசாங்கம் ஆட்சி நிருவாக அமைப்பில் தக்க மாற்றங்கள் ஏற்படுத்துவதன் மூலம் மரணப்பதிவு அத்தாட்சிப் பத்திரங்களையும் சிங்கள பாஷையில் கொடுக்கும் ஒழுங்குகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். சுடுகாட்டிலும், இடுகாட்டிலுங்கூட, தொட்டிலிலும் பெட்டியிலும் பிரசவவேதனையின்போதும் கொள்ளிக்கட்டைக் குவியலிலும் சாக்காலம்வரையும் செத்தபின்னுமோவென்றால்— அம்மம்மா! ஈழத் தமிழ் இனத்தின் பிரேதத்தைச் சிங்களப் பூதம் தொடர்ந்து பீடிக்கின்றதே! இனிமேல் இடுகாடு சுடுகாட்டிலும்கூட ஈமக்கிரியைகள் ஈழத் தமிழனுக்கு ஈனத்தை விளைவிப்பதாகவே நடைபெறுமென்று எண்ணக்கிடக்கின்றது. சுடலையிலும் ஈழத் தமிழ் மகன் ஒருவரின் பிரேதத்தைச் சிங்களத்தின் சீல் வைத்த போர்வையிலே மூடியபின்பே கட்டைக்கு மேல் வைத்துக் கொள்ளிவைக்கும் அல்லது புதைக்கும் குழியில் வைத்து மண்போடும் கொள்கை அமுலுக்கு வருமோ என்று எண்ணவேண்டிவந்துள்ளது!

சுடலையிலும் சவக்காலையிலும் ஈழத் தமிழ் மகன் அற்றுப் போகும்போது அதற்கு அத்தாட்சிப் பத்திரம் சிங்களம் — என்ன அதர்மம்! என்ன அக்கிரமம்!! என்ன அநியாயம்!!!

மனப் புண்பாடு, — 15

ஈழம் தமிழ் இன மக்களின் சமுதாய அழிவு ஒழிவு

1796 ஆம் ஆண்டிலே தமிழ் ஈழம் பிரதேசத்தை டச்சுக்கார ரிடமிருந்து பிரிட்டிஷ் அரசாங்கம் கையேற்றது. இலங்கையில் பிரித்தானியருக்குரிய பகுதிகளின் முதல் குடியேற்ற நாட்டுக் காரியதரிசி ஹியூகிளெக்ஹோர்ண் என்பார் பின்வருமாறு தனது 1799 ஆம் ஆண்டின் அறிக்கையில் எழுதியுள்ளார் :

> "இரு சாதி இனங்கள் மிகப் பழைய காலந்தொட்டு இலங்கைத் தீவின் ஆட்சியைப் பகிர்ந்து அனுபவித்து வந்துள்ளன. சிங்கள மக்கள் வளவைநதி தொடக்கம் சிலாபம் ஈறாக உள்ள தென்மேல் கரையோரங்களிலும் அடுத்துள்ள உள்நாட்டுப் பகுதிகளிலும் வசித்துவருகிறார்கள். மலபார் மக்கள் (அதாவது ஈழம் தமிழ் பேசும் மக்கள்) ஏனைய வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வசித்து வருகிறார்கள். இந்த இரண்டு இனங்களும் தங்கள் சமயம், பாஷை, பழக்கவழக்கங்களில் ஒன்றோடொன்று மிகவும் வித்தியாசமுடையனவா யிருக்கின்றன."

இந்த இரு இனங்களும் ஆட்சிகொண்ட தேசங்களின் பரப்பெல்லைகள் 1803 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆந் திகதியில் 'அரோசிமித்' என்னும் அரசாங்க நில அளவை உத்தியோகஸ்தர் தயாரித்த படத்தின்படி லண்டன் நகரில் அச்சிடப்பெற்றுப் பகிரங்கப் படுத்தப்பட்டதன்மூலம் தீர்மானித்து அறிவிக்கப்பட்டன.

1815 ஆம் ஆண்டில் கண்டி ராச்சியமும் பிரித்தானியருக்கானது. இங்கேயும் தமிழரும் சிங்களரும் என்ற ஈரினங்களும் இருந்தன. 1832 இல் கோல்புறூக் கமிஷன் நியமிக்கப்பட்ட பின்னர் ஆங்கிலம் அரசியல் மொழியாக்கப்பெற்று அதற்கு முக்கியத்துவம் வழங்கினர் ஆட்சியாளர்.

1833 ஆம் ஆண்டுவரை இந்த ஈரின அமைப்பாகிய உண்மை நிலையைப் பிரித்தானிய அரசாங்கம் எல்லாவித நிர்வாக விடயங்களிலும் ஏற்று அரசு புரிந்தனர். தமிழ் பிரதேசத்தின் பரிபாலனம் தமிழிலும் ஆங்கிலத்திலும் நடாத்தப்பட்டு வந்தது.

பிரிட்டிஷ் அரசாட்சிக் காலத்தில் இலங்கையில் அவர்களால் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கையின் பிரகாரம் பல இனங்களும் ஒன்று சேர்க்கப்படவேண்டுமென்று எண்ணி இலங்கையர் என்று கூறும் ஒரே இனத்தைத் தமது அரசியல் முன்னேற்றத்திற்காக

ஒழுங்குபடுத்தினர்கள். அந்த இனத்திலே தமிழர், இஸ்லாமியர், சிங்களர், பறங்கியர், மற்றும் 'இலங்கைதான் தங்கள் தாய்நாடு' என்று கூறும் சாதி சமயங்களைச் சேர்ந்தவர்களை ஒன்றுசேர்த்து நடத்தினர்கள். அண்மைக்காலம் வரையும் இந்நிலை நீடித்திருந்தது. இற்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முன்பதாக சேர் பொன். இராமநாதன் இலங்கைச் சட்டசபை அரசாட்சிக் காலத்தில் முதன்முதலாக கல்விகற்ற இலங்கையருக்குரிய அங்கத்தவர் என்று தெரியப்பெற்றார். இலங்கையின் சகல மக்கள் சார்பாக சேர் பொன். இராமநாதன் ஒரே பிரதிநிதியாக விளங்கியுள்ளார்.

இதனால் 'இலங்கையர்' என்னும் கருத்தொருமைப்பாடு இன்னும் வலுப்பெற்றது. ஆனால் 'இலங்கையர்' என்றால் ஒரு சுத்த இனம் அல்ல. அந்த இனமே கலப்பு இனம். சுத்த இனம் யாது என்றால் — பேர்போன றஷியத் தலைவர் வருணித்திருக்கிறார் :

> "சரித்திரத்தின் அடிப்படையில் விருத்தியான, தரித்து நீடித்து நிற்பதான மக்கள் சேர்க்கையாய், தனக்கெனவோர் மொழி, இராச்சியம், பொருளாதார நல்வாழ்வு, மனோதத்துவ உறுதிப்பாடு இத்தனையும் பொருந்தியதாய், பண்பாடு மிளிரும் தெளிவானதொரு சமுதாயமே 'ஒரு இனம்' என்று முறையாக வழங்கப்படவேண்டும்."

திறம்பட இவ்வாறாக ஒரு இனத்தின் தாரதம்மியங்களை வரையறை செய்து கூறியவர் றஷிய நாட்டின் புகழ்வாய்ந்த தலைவர் ஸ்டாலின் என்பவரே. ஈழம் தமிழ் இனம் ஸ்டாலின் அவர்களின் வரைவிலக்கணத்திற்கு முற்றிலும் அமைந்த ஒவ்வொரு அம்சங்களுமடங்கிய ஒரு இனம் என்பது சரியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

1955 ஆம் ஆண்டு தொடக்கம் சிங்கள அரசியல்வாதிகளும் சிங்களத் தலைவர்களும் சிங்கள மந்திரிமாரும் இரகசியமாகவும் கபடமாகவும் ஈழம் தமிழ் இனத்தை அழித்தொழிக்கும் திட்டத்தையும் கொள்கையையும் கையாண்டு வருகின்றார்கள். இந்தக் கொள்கை அபிவிருத்தியின் உச்சநிலையைத் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார் திரு. ஹேமா பஸநாயக்கா, இராணி அப்புக்காத்து, முன்னைநாள் பிரதம நீதியரசர். கீழே தரப்படும் பத்திரிகைகளில் வெளிவந்த பிரசுரக் குறிப்புச் சுருக்கங்கள் அவருடைய பகிரங்கப் பேச்சுக்களை வெளியிட்டிருக்கின்றன.

பிரசுரக்குறிப்புச் சுருக்கம்: (i) இன்று இலங்கைக்குத் தேவையென்னவென்றால் இந்த நாட்டில் சிங்கள மக்களின் அபிலாசை

களைப் பேணிப் பாதுகாக்கும், அவர்களின் தாய்மொழியான சிங்களத்தைச் செவ்வனே வளர்த்துக் காக்கும், அவர்கள் மத மாகிய பௌத்தத்தை வளர்த்துக் காத்து மேம்படுத்தும், ஒரு சிறந்த அரசாங்கமேதான்.

பிரசுரக்குறிப்புச் சுருக்கம்: (ii) வடக்கு கிழக்கு மாகாணங்களை இந்த அரசாங்கம் பிரத்தியேகமான முறையில் சிங்களருக் குரிமையுள்ள பகுதிகளாக்கியமைக்கத் தக்க வழிவகைகளைப் பின் பற்றவேண்டும்.

— (இலங்கை டெயிலி மிரர் 26-11-69)

மிகவும் பிரபல்யம் வாய்ந்த பௌத்த பிரதமகுரு மகா நாயக்க தேரோ மல்வத்தை—அஸ்கிரிய ஆகிய இரு பௌத்த மத கோட்பாட்டு ஆதிக்கபீடங்களின் காலஞ்சென்ற மேலான வணக்கத்திற்குரிய விப்பாசி தனது அதிகாரபூர்வமான அறிக்கை யில் பகிரங்கமாகவே பின்வருமாறு வெளியிட்டுள்ளார்.

''ஒரே மொழி, ஒரே இனம், ஒரேமதம்'' என்பதுதான் அவரின் அதிகாரபூர்வமான அறிக்கை.

இந்த அரசியல் உள்ளப்பாங்கில் உற்பத்தியானதோர் தத் துவம் ''இலங்கையர்'' என்பதாகும். இதுவேதான் ''இலங்கை யின் ஒரே இனம்''—இலங்கைக்குரியதான இனம் மட்டும்—என்று கருதப்பட்டது.

பாளிமெந்து சபை அங்கீகாரம் பெற்ற இலங்கைச் சட்ட திட்டத் தொகுப்புக்களில் ''இலங்கையர்'' என்ற சொல் இடம் பெற்றிருந்தது. காணி அபிவிருத்திச் சட்டத்தில் (ஒடினன்ஸில்) இலங்கையர் என்ற சொல்லின் வரைவிலக்கணம் தெளிவாக் கப்பட்டிருந்தது. ''இலங்கையிற் பிறந்தவர்—இலங்கையில் நிரந்தரமாகச் சீவியம் செய்து வருபவர்—இலங்கையர்'', என்பதுதான் அந்த வரைவுறுதியாகும். இந்தச் சொல் காணி அபிவிருத்திச் சட்ட ஒடினன்ஸிலிருந்து இவ்வாண்டு நீக்கப்பட் டிருப்பது குறிப்பிடப்படவேண்டியதோர் விடயமாகும். அதா வது, இதுகாறும் இருந்துவந்தவோர் மாதிரி இல்லாமல் 1969ஆம்ஆண்டின் 16ஆம்இலக்கச் சட்டம் இந்த ''இலங்கையர்'' என்ற சொல் இல்லாமலே வெளிவந்துள்ளது. இந்தப் பிரகார மாக இலங்கையின் சட்டத் தொகுப்புகளிலும் இச்சொல் நீக்கப் பட்டுவிட்டது.

இப்படியாக ''இலங்கையர் இனம்'' என்னும் சொல் இந்தமாதிரி இல்லாமலாக்கப்பட்டு விட்டது. இனிமேல் இந்தச்

சொல்லுக்கு இந்த நாட்டரசியலில் இடமேயில்லை. இருக்கவும் முடியாது என்பதற்கு இதைவிடத் திறமான சான்று எதுவும் தேவையில்லை.

இனி வருங்காலம் சிங்கள இனத்தில் எல்லோரும் சேர்ந்து சிதைவடைய வேண்டியவரேதான். மூவாயிரம் ஆண்டுகளுக்கு மதிகமாக தமிழ் ஈழத்தில் பிறந்து இருந்து வாழ்ந்துவரும் இந் நாட்டுப் பூர்வீக இனமான ஈழம் தமிழ் இனத்தின் கதி என்னவது?

ஈழம் தமிழர்கள் இன்னுமா இருட்டிலும் கண்ணீரிலும் இருந்து உழலப் போகின்றார்கள். ஈழம் தமிழ் இனம் அழிந் தொழிந்து போவதைப் பார்த்துக்கொண்டு கண்மூடி, வாய் பொத்தி, மௌனிகளாய் வாழ்வதா முறை! இனம் அழியக் கண்ணெதிரே கண்டிருந்தும் எதுவும் பேசாது ஏமாந்த நிலை யில் இனியும் வாழ்வது நீதியா? முறையா? ஈழத் தமிழ் இனமே நீயே பதில் கூறு? ஈழம் தமிழ் இன மக்களே நீங்களே முடிவு செய்யுங்கள்.

பின்னுரை

பிறப்புத் தொடக்கம் இறப்பு வரையுள்ள ஈழம் வாழ் தமிழர்களின் மனப் புண்பாடுகள், முன்மொழிந்த பக்கங்களில் நோக்குமிடத்து மிகவும் வருந்தவேண்டியவை. பிரித்தானியரின் ஆட்சியிலிருந்து விலகுவதற்கு, ஈழத்தின் விடுதலை இயக்கப் போராட்ட முன்னணியில் ஈழத் தமிழர்கள் முக்கிய அரங்கை ஏற்றுக்கொண்டனர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், இரண்டாவது பத்தாண்டுக் காலகெதியிலும் ஈழம்வாழ் மக்களின் உரிமைக் கும், விடுதலைக்கும் சட்டசபையில் வாதாடியவர் ஒரு தமிழர் சேர் பொன். இராமநாதன் அவர்கள். 1915ஆம் ஆண்டு நடந்த சிங்கள–முஸ்லிம் கலவரத்திலுல் ஏற்பட்ட ராணுவச் சட்டத்தி லிருந்தும், பிரித்தானியரின் அகங்கார ஆட்சியாளரின் கொடுமையி லிருந்தும், மிருகத்தனமான செயல்களில் இருந்தும் சிங்கள மக்களைக் காப்பாற்றியவர் அவரே. கலங்கடிக்கும் வெள்ளையரின் ''கண்டவிடத்தில் சுடு'' என்ற கட்டளையை, முதலாவது உலக மகாயுத்தகாலப் பயங்கர நீர்மூழ்கிகள் உலாவும் சமயத்திலும், தன் பாத அணியின் அடித்தோலுள் நுழைத்து வீரத்தனமாகக் கொண்டு சென்றவர் ஒரு சிங்களக் கிறீஸ்தவர் E. W. பெரேரா. அந்தச் சந்தர்ப்பத்தில் ஈழத்தின் முஸ்லிம் மக்களினது வெறுப்பை யுங் கவனியாது, தன்னுயிரையும் மதிக்காது, கொலைச்சேட்டை யில் ஈடுபட்டிருந்த ஜேர்மனிய பயங்கரப் பீரங்கிக் கப்பல்களும், நீர்மூழ்கிகளும் திரிந்த இந்து மகாசமுத்திரத்தையும், மத்தித் தரைக் கடலையும் தாண்டி, பௌத்த சிங்கள இனத்துக்காக பிரித்தானிய ஆணையாளரோடு வாதாடச் சென்றவர் சைவத் தமிழர் சேர் பொன். இராமநாதன் அவர்களே.

பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள்தான், இலங்கை தேசிய காங்கிரசை அமைத்து, அரசியல் மாற்றத்தை அடைய வழிகுவித்தார். முதலாம் உலக யுத்தத்தின் எதிரிர்த்தனமான முடிவின்பின், இலங்கையின் சுய ஆட்சிக்கு அடிகோலக்கூடிய, அரசியல் மாற்றங்கள் அமைந்த ஓர் திட்டத்தை வகுத்து, ஒரு தூதுக் குழுவுக்கும் தலைமை தாங்கிப் பிரித்தானிய குடியாட்சிக் காரியதரிசியிடம் சென்றார்.

ஈழம் தமிழர்களின் பிரதிநிதித்துவத்திற்கு, சிங்களத் தலைவர்கள் இழைத்த அரசியல் சதியினால், அருணாசலம் அவர்கள் தேசிய காங்கிரஸ் சபையில் இருந்து விலகி, ஈழத் தமிழர் முன் னணியை அமைத்தார். இதுவே இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அமைவதற்கு ஓர் நற்சகுனமாய் வாய்த்தது. இதுவே ஈழம் வாழ்

தமிழருக்கு அருளைசலம் மகாதேவா அவர்களை, மத்திய நாட்டின் தேசிய
தானமாய் அமைந்த மேல்மாகாணத் தமிழருக்குப் பிரதிநிதியாக களால்
வருவதற்குச் சட்டசபையில் வாய்ப்பளித்தது. தொடர்

இப் பின்னுரையை ஆக்கியவரின் வழிகாட்டுதலாலும், ளையும்,
சகவாசத்தாலும், திரு. D. S. சேனநாயக்கா அவர்கள் ஒருவித பௌத்த
இடரும் இல்லாமல் பிரித்தானிய பாராளுமன்ற ஜனநாயக யும், இ
அடிப்படையில் மக்களின், மக்களுக்கு மக்களால் சுதந்திரத்தை திரு. R
இலங்கைக்குப் பெற்றுக்கொள்ள முடிந்தது. களையும்
ஈழம் த

1952 ஆம் ஆண்டில் D. S. சேனநாயக்காவின் மரணத்தின் சர்வ
பின், பௌத்த சிங்கள அரசியல்வாதிகள், ஒருத்தரை ஒருத்தர் கொடுங்
தாக்க, பௌத்த சிங்களப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று, வலோற்
''பிரதம மந்திரிப் பதவியை'' அடைவதன்பொருட்டு, அரசியல் மாளுல்
அக்கிரமங்கள் மீண்டும் உக்கிரமான முறையில் தலைதூக்கின. யில் பா
இதனுல் சுதந்திரம் அடைய உதவிய மக்களின் இன ஒற்றுமையும், கைக்குப்
கட்டுப்பாடும் மக்களிடையே சீர்குலைந்தன. யல் சட்
அந்தச்

இருபதாம் நூற்றாண்டின் முதற்பாகத்தில் இலங்கை மக்கள் ழங்கி
ஒன்றுபட்டார்கள் என்று கருதப்பட்டு, பிரித்தானியரிடத்தில் விட்டுவி
ஒன்றுக்குப்பின் ஒன்றுகப் பெற்றுக்கொண்ட அரசியல் திருத்தங்
களினுலேற்பட்ட இலங்கையின் ஐக்கிய இனம் இன்று சிதறடிக்கப் பூர
பட்டது. இதன்பின் இருவேறு இன அபிமான சமுதாயங்க தாண்டு
ளாகிய, ஈழம் தமிழ் சமுதாயத்துக்கும், பௌத்த சிங்கள சமு நம்பிக்
தாயத்துக்கும் இடையே இனக்குரோதம் தாண்டவமாடியது. தலைவன்
மறந்து

கொடூரமான சுயநலமுடைய பௌத்த சிங்கள அரசிய ானத்
வாதிகளால் இழக்கப்பட்ட ஈழம் தமிழர்களின் அத்தி கம், வ
சுதந்திரத்தையும், உரிமையையும் நேர்மையான முறையி ாவது
பெற்றுக்கொள்ள வேண்டியதற்கு, என்ன நடவடிக்கைக எடுக்கவேண்டும் என்பதைச் சிந்திக்கவேண்டிய சந்தர்ப்ப தற்
சூழ்நிலை ஈழம் தமிழருக்குத் தோன்றியுள்ளது. துக்கும்
தீர்க்க

இனக்கொலையைத் தடைசெய்யவேண்டும் என்றும், தண் ''சாம,
டிக்கவும் வேண்டும் என்றும் உறுதிப்படுத்தி, 1948ஆம் ஆண்டு பற்றல்
கூடிய மகாநாட்டில், ''இனக்கொலை ஓர் பாரதூரமான மாளுல்
குற்றம் எனச் சர்வதேச மகாநாட்டுச் சட்டத்தின்கீழ்'' அமைக்கப் சம்மத
பட்டது. யில் த

இனக்கொலை யாதென்று கருதுங்கால்: ''(அ) ஓர் இனத்தின் பாட்டி
அங்கத்தவர்களைக் கொல்லுதலும் சட்டதிட்டங்களைக்கொண்டு பிரசா
(ஆ) முற்றுமாய் அன்றி தனித்த பாதகமாய், சமுதாயரீதியான, இருப்ப

தேசிய இன ரீதியான, வகுப்பு ரீதியான, சமய ரீதியான முறைக களால் அழிக்க முயற்சி எடுத்தல்.'' 1952ஆம் ஆண்டுக்குப்பின், தொடர்ச்சியாக வந்த சிங்கள அரசாங்கங்களின் நடத்தைக ளையும், அவர்கள் செய்த மனப் புண்பாடுகளையும் கவனித்தல், பௌத்த குருமார்களின், பெரியோர் கூட்டத்தின் நடத்தையை யும், இளைப்பாறிய பிரதம நீதிபதி ஹேமா பசநாயக்கா, (Q. C.) திரு. R. G. சேனநாயக்கா (M. P.) போன்றவர்களின் செயல் களையும், நிறுத்தவேண்டிய நடைமுறையை எடுக்காவிட்டால், ஈழம் தமிழர்களின் வாழ்க்கை இனக்கொலையில் முடியும்.

சர்வதேச மனித உரிமைகள் சாசனம் கூறுவதாவது: ''மனிதன் கொடுங்கோன்மைக்கும், அநியாயத்துக்கும் அகப்படாமல், வலோற்காரமுறையில் ஈற்றில் ஈடுபடாமல் இருக்கவேண்டு மானால் அவன் தன் மனித உரிமைகளைச் சமசட்ட ஆட்சிமுறை யில் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.'' 1948ஆம் ஆண்டு இலங் கைக்குப் பூரணசுதந்திரத்தை ஸ்தாபிக்க ஒழுங்கு செய்த, அரசி யல் சட்டத்தைச் சேர்ந்தெழுதிய சோல்பெரி பிரபு ''நான் அந்தச் சட்டத்திலே, இந்தியாவிலும், மற்றைய தேசங்களிலும் ஓங்கிவரும் மனித உரிமைக் கொள்கைகளைச் சேர்க்காமல் விட்டுவிட்டேன்'' என்று புலம்புகின்றார்.

பூரண அரசியல் சுதந்திரமென்பது இலங்கையின் இரண்டு பத் தாண்டுக்கால அரசியல் சரித்திரத்தில், பௌத்த சிங்கள அரசியல் நம்பிக்கைத்துரோக சரித்திரமாகும். புத்தி உள்ள ஈழம் தமிழ்த் தலைவன் எவனுவது தற்கால இலங்கையின் இந்தச் சரிதையை மறந்துவிடக் கூடாது. சிங்கள அரசியல்வாதிகளை நம்பி தன் மானத்தையும் தப்பிப்பிழைக்கும் வாழ்வையும் தாக்கும் ஒப்பந் தம், வாக்குறுதி, காரியக் கோட்பாடுகள், முதலியவற்றில் எவை யாவது ஒன்றிலும் நம்பிக்கை வைக்காமல் நடத்தலே சிறந்தது.

தற்காலத்தில் ஈழம் தமிழ் இனத்துக்கும், சிங்கள இனத் துக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளையும் எதிர்ப்புக்களையும் தீர்க்கவேண்டுமானால், தமிழர் பரம்பரை பண்பாட்டுமுறையான ''சாம, பேத, தான, தண்டம்'' முதலாம் நீதிவாக்கியத்தைப் பின் பற்றல்வேண்டும். இத்திவ்விய வாக்கியத்தை ஒப்பேற்றவேண்டு மானால், ஈழம் தமிழ் இனம் பொதுத் தேர்தலிலோ சர்வசன சம்மதத்திலோ, பிரஜாநிவேதனத்திலோ, ஒன்றுபட்ட தலைமை யில் தங்கவேண்டும். சர்வதேச அரசியல் நிபந்தனைக் கட்டுப் பாட்டின் முதலாம் பந்தியின் முதலாம் பிரிவில் குறிக்கப்பட்டுள்ள பிரசா பரிபாலன முறையிலும், அரசியல் உரிமையிலும் கூறி இருப்பதாவது: சகல மக்களும் தங்களுக்கு தங்கள் எதிர்கால

NAM INSTITUTE
152
REFERENCE
LIBRARY
JAFFNA

நன்மைகள் எவையென்று தீர்மானம் செய்ய உரிமையுண்டு. அந்த உரிமையின் காரணமாக, தங்கள் அரசியல் நிலைமையையும், பொருளாதார, சமுதாயப் பண்பாட்டு முன்னேற்றத்தையும் தனி இன்றி முயற்சியுடன் அடையலாம்.''

இந்த நிபந்தனைக் கட்டுப்பாட்டின் முகவுரை கூறுவதாவது: ''தனி மனிதனுக்கு தனி மனிதன் செய்யும் கடமைகளும் உண்டு. தான் சேர்ந்திருக்கும் சமுதாயத்திற்கும், இந்தக் கட்டுப்பாட்டில் அடங்கி இருக்கும் உரிமைகளைக் கவனித்தற்கும், முன்னேற்றத்துக்குக் கொண்டுவரவும், பொறுப்புள்ளவனாக இருக்கின்றான்.''

இந்த உரிமையையும், கடமையையும், ஈழம் தமிழ் இனமும், இவர்கள் தேர்ந்தெடுத்த தலைவர்களும், வற்புறுத்திப் பெற்றுக் கொள்ள அக்கறையுடன் எத்தனிக்க வேண்டும்.

ஈழம் தமிழ் இனத்தின் பிறப்புமுதல் இறப்புவரை நிகழ்ந்திருக்கும் மனப்புண்பாடுகளைத் தெய்வச் செயலாகத்தான் ஆற்ற முடியும். இஃது கைகூடுவது எப்படியெனில், பழம் தமிழ் ஈழத்தின் இழந்த தமிழ்ப் பிரதேசத்தை மீண்டும் அடைவதனாலாகும்.

ஈழம் தமிழருக்கு எது விருப்பம்? ஒரு இனம், ஒரு மொழி, ஒரு சமயம், ஒற்றி அரசு எனப் பாராட்டும் மக்களுடன் சேர்ந்து, பௌத்த குருமாரின் வேண்டுகோளின்படி சிங்களராக வர விருப்பமா? அன்றி, ஓர் சிங்களத் தமிழ் சமுதாயம் வேண்டுமா? அப்படியென்றால் பௌத்த சிங்கள சமுதாயத்திற்கு அடிமைப்பட்ட சமஷ்டி அரசாங்கம் வேண்டுமா? அதுவும் பௌத்த சிங்கள மந்திரிசபையின் அதிகாரத்திலேயே தங்கி இருக்கவேண்டும்!

அல்லாவிடில், ''முன்னிருந்த ஈழம் தமிழ் இனத்தின் ஆட்சிக் குட்பட்ட பூமியைத் திருப்பிப் பெற்றுக்கொண்டு ஜனநாயக முறையின்படி, ஈழம் தமிழரின், ஈழம் தமிழருக்கு, ஈழம் தமிழரால் ஓர் சுதந்திர தனி அரசாங்கத்தை'' வகுப்பதா?

இவ் வினாக்களுக்குக் கொடுக்கும் பதில்களில், ஈழத் தமிழ் இனத்தின் எதிர்கால நிலைமையும், விதியும் தங்கி இருக்கின்றன.

மகர லிங்க வாசு,
கிரிமலை,
கலியுக 5071,
சௌமிய, தைப் பொங்கல், புதன்,
புதன் 14, ஜனவரி 1970.

செ. சுந்தரலிங்கம்
ஈழம் தமிழ் ஒற்றுமை முன்னணித்
தலைவன்